மெட்ரிக் பள்ளிகளில் தமிழ்



தமிழ்நேயம்
123, காளீசுவரர் நகர்
கோயமுத்தூர் – 641 009.

மீண்டும் 'தமிழ்நேயம்'

1999 ஆகஸ்டில் 12 ஆவது இதழோடு தமிழ்நேயத்தை நிறுத்த நேர்ந்தபொழுது அடுத்த சனவரியில் தமிழ்நேயத்தை மீண்டும் கொண்டுவர இயலுமென்று தெரிவித்திருந்தேன். திங்கள்தோறும் ஓர் இதழ் என்பதற்கு பதிலாக இரண்டு திங்கள்களுக்கு ஒரு சிறு வெளியீடு என்ற முறையில் இனி தமிழ்நேயத்தை புதுப்பிக்க இயலும் என நம்புகிறேன்.

தமிழின் தொடர்பாக நிறையச் சிக்கல்கள் இன்று முன்வந்துள்ளன. தமிழ், கல்விமொழியாக வேண்டும். ஆட்சிமொழியாக வேண்டும். தமிழ் செவ்வியல் மொழியாக ஏற்கப்படவேண்டும். தமிழ் தன்னை நவீன காலத்திற்கொத்த முறையில் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று தொடங்கி எத்தனையோ ஆக்கங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. தமிழ்மக்களுக்கான அரசியல் என்றும், பொருளியல் என்றும், கல்வி என்றும், கலை இலக்கியங்கள் என்றும், வேளாண்மை, தொழில், மருத்துவன் என்றும் நாம் பேசவேண்டியதிருக்கிறது. உலக அளவில் தமிழ் மக்களுக்கு நேர்ந்துள்ள நெருக்கடிகள் குறித்து பார்க்க வேண்டியதிருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் தமிழ்நேயத்திற்கு ஆழ்ந்த அக்கறைகள் உண்டு. தமிழ் நேயத்தின் நடைமுறையில் ஒரு புதிய மாறுதலை இனிக் கடைப்பிடிக்க விரும்புகிறேன். தமிழின் பல்வேறு சிக்கல்கள் ஆக்கங்கள் குறித்து தமிழக அளவில் ஆய்வுகள், கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை எழுத்து வடிவில் எதிர்காலத்தின் தேவைக்கான பதிவு பெறுவதில்லை. இவற்றில் ஒரு சிலவற்றையேனும் "தமிழ்நேயம்" இனி பதிவு செய்யும் முறையில் இரண்டு திங்கள்களுக்கு ஒரு சிறு வெளியீடு என்ற முறையில் வெளிவரும்.

நண்பர்களின் கருத்துரைகள் மற்றும் ஒத்துழைப்பை பெரிதும் வேண்டுகிறேன். ஓராண்டுக்கு ஆறு சிறிய வெளியீடுகள் இவற்றுக்கான நன்கொடை குறைந்தளவு ஐம்பது ரூபாய். பல்வேறு நகரங்களில் நடைபெறும் கருத்தரங்க ஆய்வுகள் முதலியவற்றை நண்பர்கள் தொகுத்துத் தரவேண்டும். தமிழ்தொடர்பான எப்பொருள் குறித்தும் அமைவுகள் மற்றும் நிகழ்ச்சிகளைத் தொகுப்பதோடு திறனாய்வும் தேவை.

இரண்டாயிரம் சனவரியில் வெளிவரும் இந்த முதல் வெளியீட்டில் மெட்ரிக் பள்ளிகளில் தமிழ் குறித்த கருத்தரங்கொன்றின் பதிவுகள் இடம் பெறுகின்றன. கருத்தரங்கில் கலந்து கொள்ள இயலாத ஒரு சிலரின் கருத்துக்களும் இடம்பெறுகின்றன. மாறுபட்ட கருத்துக்கள் தவிர்க்கப்படவில்லை. "தினமணி"யிலிருந்தும் கடிதங்கள் தரப்பட்டுள்ளன. ஒரு ஆரோக்கியமான கலந்தாய்வுதான் நம் நோக்கம். விவாதங்களை இனியும் தொடரலாம்.

மெட்ரிக் பள்ளிகளில் தமிழ்

கருத்தரங்க உரைகள்

முன்னுரை

முதல் வகுப்பில் தொடங்கி ஐந்தாம் வகுப்பு முடிய, அடுத்த மூன்றாண்டுகளுக்குள் தமிழகத் தொடக்கப் பள்ளிகள் அனைத்திலும் தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டுமென்று தமிழக அரசு ஆணை வெளியிட்டதை நாம் வரவேற்கிறோம். ஆனால் இந்த அரசாணையை எதிர்க்கும் முறையில் மெட்ரிக் பள்ளிகள் நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளார்கள். தமிழகத்தில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதை இவர்கள் எதிர்ப்பது எந்த நாட்டிலும் இல்லாத விநோதமாகத்தான் இருக்கிறது. இவர்களின் போக்கை கண்டிக்கும் முறையில் 27–12–99 அன்று தமிழகம் முழுவதும் இவர்களுக் கெதிராக கண்டனக் குரல் எழுப்பும் முறையில் பேரணி நடத்தவேண்டுமென்று தமிழ்ச் சான்றோர் பேரவையினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இதன் தொடர்பாக, கோவையிலுள்ள பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றக் கிளையின் தலைவராகிய திரு. ஆண்மை அரசு அம்மையப்பா அவர்கள், கோவையிலுள்ள தமிழ் அமைப்புக்களை திரட்டும் முறையில், வடகோவை – கல்வி, அகத்தில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். திரு. கு.வெ.கி. ஆசான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்வேறு தமிழ் அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர். பலர் பேசினர். மெட்ரிக் பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வி தொடர்வது குறித்தும் தமிழைப் பயிற்றுமொழி ஆக்குவதற்கு இடையில் நேர்ந்த தடைகள் மற்றும் சிக்கல்கள் குறித்தும் பல்வேறு அணுகுமுறைகளோடு பலரும் கருத்து தெரிவித்தனர். இவை குறித்து நாம் தொடர்ந்து ஆராய்வதன் தேவை கருதி இக்கருத்துக்கள் இந்தச் சிறு வெளியீட்டில் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இந்த வெளியீடு அச்சாக்கம் பெறுவதற்கான அனைத்து உதவிகளையும் செய்த பெரியவர்கள் மற்றும் நண்பர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

கருத்து உரை

திரு. அரசன் கோவன் :-

விலங்குகளுக்கும் மனிதனுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. கோழி, குஞ்சு பொரித்தவுடன் குஞ்சு நடக்கத் தொடங்கும். ஆடு, மாடு, யானை முதலியனவும் இப்படித்தான். மனிதக் குழந்தையைப் பொருத்தவரை குழந்தைப் பருவம் நெடியது. கார்ல் சாகன் என்ற அறிஞர் இதைப் பற்றி விரிவாக ஆராய்ந்து கூறுகிறார். குழந்தைக்கு முதல் மூன்றாண்டுகளில் மூளை வளர்ச்சி அதிகம். ஆறு ஆண்டுகளில் மூளை வளர்ச்சி 90 சதம் ஏற்பட்டு விடுகிறது. முதல் மூன்றாண்டுகளில் குழந்தை, மொழியைக் கற்றுக் கொள்கிறது. பெற்றோர் பேசும் மொழியை இலக்கண முறைப்படி தானாகக் கற்றுக் கொள்கிறது. குழந்தைப் பருவம் என்பது பன்னிரண்டு ஆண்டுகள். குழந்தை ஐந்தாவது வகுப்பு முடிக்கும்பொழுது குழந்தையின் மூளை வளர்ச்சி முதிர்ச்சி அடைகிறது. ஆகவே ஐந்தாம் வகுப்பு முடிய தாய்மொழியில் கற்பதுதான் சிறந்தது என்பதில் அய்யமில்லை.

தொடக்கப் பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கும் திட்டத்திலிருந்து அரசு இனி பின்வாங்காது என்று முதல்வர் அறிவித்துள்ளார். தயக்கமில்லாமல் அரசு செயல்படவேண்டுமென்று நாமும் கேட்டுக் கொள்கிறோம். தமிழைப் பயிற்று மொழி ஆக்கலாம் என்று ஏற்கெனவே உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதற்குப் பிறகும் இப்போது மெட்ரிக் பள்ளிகள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இந்தப் போக்கை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் ரூபாய் ஐயாயிரம் வீதம் 20 ஆயிரம் பள்ளிகளில் வசூல் செய்திருக்கிறார்கள். இப்படி வசூல் செய்த தொகையை வைத்துக் கொண்டு, இவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். பணபலத்தை வைத்துக் கொண்டு இவர்கள் வேகமாக செயல்பட முற்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் எத்தகைய கருத்துக்களை நீதிமன்றத்தில் முன்வைத்திருக்கிறார்கள்?

1. ஏற்கெனவே 3 ல் 2 பாடங்களை தமிழில் நடத்த வேண்டும் என்று ஒரு அரசாணை பிறப்பித்திருக்கிறார்கள். இந்த வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் முடிவு பெறுவதற்கு முன்னர் இன்னொரு அரசாணை

பிறப்பித்திருக்கின்றனர். இது செல்லுபடியாகாது. இப்படி ஒரு சட்ட சிக்கலை எழுப்பியுள்ளனர்.

2. முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு முடிய மாணவர்கள் தமிழில்தான் கற்கவேண்டும் என்பதற்கு, அரசு சரியான காரணங்கள் கூறவில்லை.
3. இந்த அரசாணையால் சிறுபான்மை மக்கள் தண்டிக்கப்படுவார்கள்.
4. இந்தப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு வேலை பறிபோகும்.
5. நான் எந்த மொழியிலும் கற்பது என் அடிப்படை உரிமை. இதில் அரசு தலையிடக் கூடாது.
6. நாம் கவனமாக இருக்கவேண்டும். இதற்கு நாம் பதில் கூறவேண்டும். சட்டச் சிக்கல் என்ற முறையில் அரசு கோட்டைவிட்டுவிடக் கூடாது. எதிரிகள் என்ன ஆயுதம் வைத்திருக்கிறார்களோ அதற்குத் தகுந்த ஆயுதங்களை நாம் வைத்திருக்க வேண்டும். அரசு வழக்காடினால் போதாது. தமிழ் அமைப்புக்களும் வழக்காட வேண்டும்.

1967–ல் அறிஞர் அண்ணா அவர்கள் இருமொழித் திட்டத்தைக் கொண்டு வந்தார். நமக்கு இந்தி தேவையில்லை; தமிழும், ஆங்கிலமும் போதுமென்பதே இருமொழித் திட்டம். இதற்கு மாறாக இந்தி வந்திருக்குமென்றால் இப்பொழுது "மம்மி–டாடி" என்பதற்கு பதிலாக "மாதாஜி–பிதாஜி" என்று நம் குழந்தைகள் பேசிக் கொண்டிருப்பார்கள். இதற்காக அறிஞர் அண்ணாவை நாம் பாராட்ட வேண்டும். தமிழ்ச் சான்றோர்களை நாம் பாராட்ட வேண்டும். அரசு இப்படியொரு ஆணையைப் பிறப்பிப்பதற்கு இவர்கள்தான் காரணம்.

ஆங்கிலப் பள்ளிகள் ஏதாவதொரு அறிவியல் முறையைக் கடைப்பிடித்துத்தான் இப்படிச் செய்கிறார்களா என்று நாம் பார்க்கவேண்டும். முன்பெல்லாம் 5 வயது முடிந்து 6 ஆவது வயதில் தான் குழந்தைகளை பள்ளியில் சேர்த்துக் கொள்வது என்று விதி இருந்தது. 1970 களில் 4,5 வயது குழந்தைகளுக்கு "கின்டர் கார்டன்" என்ற கல்விமுறை வந்தது. இதைத்தான் K.G. என்று சொல்கிறோம். பணம் பண்ணுவதற்கு இன்னொரு வழிமுறையைக் கண்டுபிடித்தார்கள். 4, 5 வயது குழந்தைகளுக்கு Upper KG 3 வயது குழந்தைகளுக்கு Lower KG இதில் அறிவியல்முறை என்று ஏதுமில்லை. இப்பொழுது 2 ½ வயது குழந்தைகளுக்கு Pre-K.G. குழந்தைகள் சிறு வயதில் 7, 8 மணி வரை தூங்கியெழ வேண்டும். குழந்தைகளுக்கு இது நல்லது. குழந்தைகளை

6, 7 மணிக்கு மிரட்டி எழுப்புகிறார்கள். பிஞ்சு விரல்களில் எழுதச் சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் குழந்தைகளைப் பாழ்படுத்துகிறார்கள். அரசு அனுமதி பெற்றோ அல்லது பெறாமலோ இப்படிச் செய்கிறார்கள் இது கொடுமை. பெற்றோர்களும், குறிப்பாகத் தாய்மார்கள் இதைத்தான் விரும்புகிறார்கள். நான் பணியாற்றும் போக்குவரத்துக் கழக ஊழியர்களும் இப்படித்தான் செய்கின்றனர். இவர்கள் தெரிந்து இதைச் செய்வதில்லை. பிறர் செய்வதைப் பார்த்து நாங்களும் இதைச் செய்கின்றனர். இந்தப் போக்கு நீடித்தால் அபிமன்யு கதையில் வருவது போல, தாய் வயிற்றில் இருக்கும் குழந்தைகளுக்குக்கூட ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கி விடுவார்கள்.

ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வது என்பது வேறு; ஆங்கிலத்திலே கற்றுக் கொள்வது என்பது வேறு. இது ஒரு அடிப்படையான கேள்வி. ஆங்கிலம் நமக்கு வேண்டும். இதை யாரும் மறுக்கவில்லை. ஆங்கிலத்தில் தான் பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. தாய்மொழியில் கற்றுக் கொள்வது தன் மூளையில் நன்றாகப் பதியும் கணக்கு வாய்ப்பாடுகளைத் தமிழில் கற்றுக் கொள்ளும்போதுதான் மனதில் நன்றாகப் பதிகிறது. தேவைப்படும்பொழுது வாய்ப்பாடுகளைச் சிரமமில்லாமல் நினைவுக்கு கொண்டு வருகிறோம். ஆங்கிலத்தில் இது இயலாது.

பத்தாம் வகுப்பு வரை நான் தமிழில்தான் கற்றேன், பி.ஈ., எம்.பி.ஏ. ஆகிய கல்வித் தகுதிகளை நான் பெறுவதற்கு, நான் பத்தாம் வகுப்பு வரை தமிழில் கற்றது எனக்குத் தடையாக இல்லை. பள்ளியில் கற்கும்பொழுதே தமிழ் உணர்வோடு நான் வளர்ந்தேன். பாவாணர் அவர்களின் அறிவுரையின்படி இராசகோபாலன் என்ற என் பெயரை, அரசன்கோவன் என்று மாற்றிக் கொண்டேன். அரசுப் பதிவிதழிலும் பெயர் மாற்றத்தைப் பதிவு செய்தேன். சேரன் போக்குவரத்துக் கழக நிறுவனத்தில் மேலாண்மை இயக்குனராகப் பணியாற்றினேன். ஆங்கிலத்தில் எழுதுவதும் பேசுவதும் எனக்குச் சிரமமாக இல்லை.

போக்குவரத்து துறையில் ஆலோசனை வழங்குவதற்காக அரபு நாடுகளுக்கு அரசால் நான் அனுப்பப்பட்டேன். அங்கு போக்குவரத்து ஊழியர்கள் முதலியவர்களோடு நான் ஆங்கிலத்தில் பேசமுடியாது. ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவியோடு ஆறு மாதங்கள் அவர்களோடு

உரையாடினேன். அந்த ஆறு மாதத்திற்குள் சிக்கலான அரபு மொழியை நான் கற்றுக் கொண்டேன். பிறகு அரபு மொழியிலேயே அவர்களோடு இயல்பாக உரையாடினேன். நானாவது அரபு மொழியை இப்படி கற்றுக் கொண்டதற்கு மாறாக, என் துணைவி எப்படிக் கற்றுக் கொண்டாள் என்பது பற்றி நான் சொல்ல வேண்டும். குடியிருப்பு வளாகத்திலுள்ள அரபுப் பெண்களோடு பேசிப்பேசி அரபு மொழியை ஆறு மாதத்திற்குள் என் துணைவி கற்றுக் கொண்டாள். ஒரு புதிய மொழி புழங்கும் சூழலில் சில மாதங்கள் நாம் இருந்தாம் போதும். அந்த மொழியை எளிமையாகக் கற்றுக் கொள்ள முடியும். இங்கிருப்பது போல பனிரெண்டு ஆண்டுகள் தேவையில்லை. வட இந்தியாவுக்கு இப்பொழுது அடிக்கடி சென்று வருகிறேன். சிரமமில்லாது அவர்களோடு இந்தியில் பேசுகிறேன். இந்த நடைமுறையைத் தெரியாதவர்கள் தான் ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டும், அப்பொழுதுதான் ஆங்கிலம் நமக்கு வரும் என்று கூறுகிறார்கள். இவர்கள் சொல்வது பொய்.

ஆப்ரிக்காவில் மேற்குப் பகுதியிலுள்ள அங்கோலாவிற்கு நான் சென்றிருந்தேன். போக்குவரத்து – ரயில் – விமானம் ஆகியவற்றின் தொடர்பாக நானும் இன்னும் சில வல்லுநர்களும் சென்றிருந்தோம். 400 ஆண்டுகளுக்கு மேலாக போர்ச்சுகீசியரின் ஆட்சியிலிருந்த நாடு அங்கோலா. கடைத்தெரு முதலிய எல்லா இடங்களிலும் வழக்கிலிருப்பது போர்ச்சுகீசிய மொழிதான். அலுவலகத்தில் மட்டுமில்லாமல் வீட்டிலும் அவர்கள் பேசுவது போர்ச்சுக்கீசிய மொழி. அவர்களின் தாய்மொழியை அவர்கள் அறவே ஒதுக்கிவிட்டார்கள். அவர்கள் போர்ச்சுகீசிய மொழியை தொடக்க முதலே கற்கிறார்கள். இவர்கள் ஆப்ரிக்க மக்கள். போர்ச்சுகீசியரின் கிறித்தவ மதம்தான் இவர்களுக்கும் மதம். போர்ச்சுகீசிய கலாச்சாரம் தான் இவர்களுக்கும் கலாச்சாரம். போர்ச்சுகீசிய மொழிக்கு இவர்கள் 400 ஆண்டுகளாக அடிமைகள். போக்குவரத்து சாதனங்கள் பேருந்து, இரயில், விமானம் ஆகியவற்றை எவ்வளவு சிக்கனமாக அவர்களே செய்து கொள்ளலாம் என்று நாங்கள் சொன்னதெல்லாம் பயன்படவில்லை. நீங்கள் ஆங்கிலத்தில் பேசுகிறீர்கள். எங்களுக்குத் தெரிந்த மொழி போர்ச்சுகீசிய மொழி. போர்ச்சுகலுடன் தான் எங்களுக்கு எல்லா உறவும். உங்கள் ஆங்கிலத்தை நாங்களும் கற்றுக் கொண்டால் தான் உங்கள் இயந்திரத்தைப் பயன்படுத்த முடியும். எங்களுக்கு போர்ச்சுகீசிய மொழி போதும் என்று சொல்லிவிட்டார்கள். எங்கள் பயணம் வீணாயிற்று.

திரு. கு. இராம கிருட்டினன்:-

தமிழக அரசு வெளியிட்ட ஆணையை எதிர்க்கும் முறையில் அனைத்து ஆங்கிலப்பள்ளிகளும் இப்பொழுது ஒன்றாகத் திரண்டுள்ளன. கடந்த 8ஆம்தேதி தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலப் பள்ளி அனைத்தும் அடைப்பைச் செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். அத்தோடு கட்டாயப்படுத்தி, "எங்களுக்கு ஆங்கிலக் கல்வி தான் வேண்டும்; இதில் அரசு தலையிடக்கூடாது; என்ன படிக்க வேண்டும் என்பதை நாங்கள்தான் தீர்மானிப்போம்" என்று குழந்தைகளிடம் எழுதச் சொல்லி அதில் பெற்றோர் கையொப்பம் வாங்கிவரவேண்டும் என்று ஏற்பாடு செய்து வருகின்றனர். குழந்தைகளைப் பள்ளியிலிருந்து வெளியேற்றிவிடுவார்களோ என்று அச்சப்பட்டு, பெற்றோரும் கையெழுத்திட்டிருக்கிறார்கள். இந்தக் கடிதங்கள் எல்லாம் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தாய்மொழிக் கல்வி வேண்டும் என்று சொல்லும் நாம் குறுகிய எண்ணிக்கையில் இருக்கிறோம். பெற்றோர்களிடம் கையெழுத்து வாங்குவதன் மூலம் தாங்கள் பெரும்பான்மையினர் என்று காட்டி அரசை இவர்கள் மிரட்டத் துணிந்துள்ளனர் இதில் தாங்கள் உறுதியாக இருப்போம் என்று அரசும் அறிவித்திருக்கிறது. எதிர்க்கட்சிகளைப் பொருத்த வரை இத்திட்டத்தை ஆதரிக்காமலும் எதிர்க்க இயலாமலும் திணறிக் கொண்டிருக்கின்றனர். மக்களைப் பொறுத்தவரை எது சரி என்பது புரியாத மயக்க நிலையில் இருக்கிறார்கள். மக்களின் வாக்குகளை நம்பி இருப்பவர்கள் அஞ்சத்தான் வேண்டும். சரியான காரியத்தைத்தான் செய்கிறோம் என்பதில் அரசுக்கு நம்பிக்கை இருக்குமானால் இத்திட்டத்தை உறுதியாக செயல்படுத்த முடியும். அரசு ஆணையை எதிர்ப்பவர்களைக் கண்டிக்கும் முறையில் தமிழ்ச் சான்றோர் பேரவையினர் 27ம் தேதி பேரணிக்கு ஏற்பாடு செய்திருக்கின்றனர். கோவையிலும் பேரணி நடத்துகிறோம்.

வரலாற்று ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் தமிழ்க் கல்வி குறித்து நாம் சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். கடந்த காலங்களில் I.A.S / I.P.S. தேர்வுகளில் தமிழ்படித்தவர்கள் அதிகம் தேர்ச்சி பெற்றார்கள். அந்த அளவுக்கு இப்போது தேர்ச்சி பெறுவதில்லை. ஆங்கிலத்தில் கற்பதுதான் இதற்கு காரணம். தமிழில் கற்றவர்கள் புரிந்து கற்றார்கள். ஆங்கிலம்தான் வேண்டும் என்ற துணிச்சலோடு மெட்ரிக் பள்ளிகள் அதிலும் குறிப்பாக கிறித்துவப் பள்ளிகள் கிளம்பியிருக்கிறார்கள். மதத்தைப் பரப்பவேண்டும் என்றால் கூட ஆங்கிலம் இவர்களுக்கு பயன்படாது. மக்கள் மத்தியில்

மதத்தை பரப்புவதற்கு இவர்கள் தாய் மொழியைத்தான் பயன் படுத்துகிறார்கள். வருமானத்திற்காக இவர்களெல்லோரும் ஆங்கிலப் பள்ளிகளை வைத்துக் கொள்கிறார்கள். தமிழை மறுப்பதற்கு இவர்களுக்கு வேறு காரணமில்லை.

அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் இப்பொழுதும் தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்கிறது. இந்தப் பள்ளிகளில் பணிபுரியும் தமிழாசிரியர்கள் நினைத்தால் அரசின் திட்டத்தை உறுதியோடு செயல்படுத்த ஒத்துழைக்க முடியும். ஆனால் இதுவரை இத்திட்டத்தைப் பாராட்டியோ எதிர்த்தோ அவர்கள் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. தமிழில் கற்கும் மாணவர்களைத் திரட்டி இயக்கமாக்க முடியும். ஆங்கிலப் பள்ளிகள் நடத்தும் இயக்கத்துக்கு நிகராக தமிழ் மாணவர் இயக்கத்தை நடத்த முடியும்.

மாணவர்களைக் காட்டிலும் தமிழ் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். 25 மாணவர்கள் இல்லாத பள்ளிகளை மூட வேண்டுமென்பது அரசு விதி. உடனே ஆசிரியர்கள் தெருவுக்கு வந்து பள்ளிகளை மூடக்கூடாது என்று ஆர்பாட்டம் செய்கின்றனர். இந்தப் பள்ளிகளில் இவர்கள் சரியான கல்வி தரவில்லை. ஆகவே தான் பெற்றோர்கள் குழந்தைகளைப் ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். பெற்றோர்களைப் பொறுத்தவரை தமிழா, ஆங்கிலமா என்பது முக்கியமில்லை. அரசு அல்லது மாநகராட்சி பள்ளிகளில் சரியான நிர்வாகம் இல்லை. தங்கள் குழந்தைகளை திறமையாக நடத்தப்படும் தனியார் பள்ளிகளுக்குத்தான் பெற்றோர் அனுப்ப விரும்புகின்றனர். அதன்பிறகுதான் ஆங்கிலம் பற்றிச் சொல்கிறார்கள்.

இந்தத் திட்டம் வெற்றிபெறுமா என்ற கேள்வி நம்முன் நிற்கிறது. அரசை நாம் ஒப்புக்கொள்ளச் செய்து விட்டோம்; இனி மக்களை ஒப்புக்கொள்ள வைக்கவேண்டும். இதற்கு முனைப்பாகச் செயல்படவேண்டும். மாணவர்களிடம் நாம் செல்ல வேண்டும். தமிழாசிரியர்களிடம் நாம் செல்ல வேண்டும். 4 பேரின் மரண தண்டனையைக் குறைக்க நாம் கருணை மனு போட்டது போல, தமிழைக் காப்பாற்ற தமிழாசிரியர்களிடம் கருணை மனுவை முன் வைக்கவேண்டும்.

திரு. *அடிகள் இரும்பொறை* :-

தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார் போன்றவர்கள் தமிழ் இயக்கத்திற்கு மறைமலையடிகள் ஒரு கண், பெரியார் அவர்கள் இன்னொருகண். இத்தகைய தமிழ் மறவர்கள் பெரியாரைச் சூழ்ந்திருந்த போது அங்கு தமிழ் சூழல்தான் நிலவியது. தொடக்கத்தில் "தமிழர் கழகம்" என்றுதான் பெயரிட விரும்பினார்கள். "திராவிடர் கழகம்" என்று பெயர் வைக்கும் எண்ணமில்லை. முற்பகலில் இப்படித்தான் முடிவு செய்தார்கள். உணவு இடைவேளையின் போது முத்தமிழ்க் காவலர் ஒதுங்கிச் சென்ற நிலையில் அங்கிருந்த தலைவர்கள் பெரியாரைச் சூழ்ந்து கொண்டார்கள். பெரியாரை மருட்டி "திராவிடர் கழகம்" என்று பெயர் வைக்கச் சொன்னார்கள். "தமிழர் கழகம்" என்ற முடிவை பிற்பகலில் அறிவிப்பதாக இருந்தார்கள். இப்பொழுது பெயரை மாற்றுவதென்றால் யாரைப் பிடிப்பது என்ற முறையில் அண்ணாத்துரையிடம் இவர்களைப் பெரியார் அனுப்பினார். அண்ணாத்துரை இதைச் செய்தார்.

ஆரியத்தை எதிர்க்க நாம் பழகிக் கொண்டோம். ஆனால் பிற மாநிலங்களிலிருந்து வந்து சுரண்டல் பேர்வழிகளாக இங்கு தங்களை நிலை நிறுத்திக் கொண்டவர்களை நாம் எதிர்க்கவில்லை. நமக்கு எதிர்க்கத் தெரியவில்லை. நயன்மைக் கட்சியால் (நீதிக்கட்சி) மட்டுமல்ல சுயமரியாதைக் கட்சியிலும் இத்தகையவர் இருந்தார்கள். நமக்கு வரலாற்று பார்வையில்லை. நமக்குள் இருக்கும் பிளவுகளை எதிரிகள் பயன்படுத்திக் கொண்டார்கள். கெங்குசாமி நாயுடு வரை இவர்களை நாம் இன்றும் பார்க்கிறோம். வீட்டில் தெலுங்கு முதலிய திராவிட மொழிகள் பேசுபவரை, இனி தமிழர் என்றுதான் பதிவு செய்ய வேண்டும். தமிழ்நாடு என்பது தமிழ்மக்களுக்கு தமிழ்பேசும் மக்களுக்கு உரிய மாநிலம். இங்குள்ளவர்களைத் தமிழில் பேசச் செய்யவேண்டும். பிற மொழிக் கலப்பை நாம் முற்றாகத் தவிர்க்கவேண்டும். பயிற்சி மொழி என்பது கூட சரியான சொல் இல்லை. பயிற்று மொழி என்று தான் சொல்ல வேண்டும்.

மறைமலை அடியினர் வழிவந்த தனித்தமிழ் இயக்கத்தினருக்கு இடைக்காலத்தில் ஏற்பட்ட முடக்கம் காரணமாகத்தான் இந்த நிலை நமக்கு வந்து சேர்ந்தது. தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் ஏதோ ஒரு சூழ்நிலையில் சொல்லி வைக்க, இதை பெரியாரின் மூலக் கொள்கைகளில் ஒன்றாகவே சிலர் கருதிக் கொண்டு தமிழை இழிவு

படுத்தினார்கள். இந்த நிலை இப்போது மாறியிருக்கிறது. இப்பொழுது ஏற்பட்டிருப்பது ஒரு கனிந்த சூழல். மெட்ரிக் பள்ளி என்று சொல்வது பொருத்தமில்லை. அரசு செய்த மொழிபெயர்ப்பு சரியில்லை. நுழைமுகப் பள்ளி என்று தான் சொல்ல வேண்டும். தமிழில் பேசுவதை ஒரு நாகரிகமாகக் கொண்டுவரவேண்டும். தமிழில் பேசுவது இயல்பாகிவிட வேண்டும். தனித்தமிழில்தான் பேசவேண்டும் என்பது கட்டாயமில்லை. இதையும் நாம் செய்தாக வேண்டும். இதைச் செய்தால்தான் பெற்றோர்களை அணுகும் போது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசினால் தமிழின் மீது அவர்களுக்கு எப்படி நம்பிக்கை ஏற்படும். முதுபழம் தொன்மை மொழி தமிழ் என்று பாவாணர் மெய்ப்பித்துள்ளார். இத்தகைய தொல் பழங்காலம் முதல் வாழ்ந்து வருகிற தமிழ்க் குடியினராகிய நாம் தமிழின் ஆற்றலை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு இப்போது வந்திருக்கிறது ஒரு வாய்ப்பு. கட்சிகள் மதங்களால் நாம் பிரிந்து நிற்கக் கூடாது. எல்லோரையும் ஒன்று கூட்ட வேண்டும். தவிர தமிழ்த் தேசியத்தை வளர்ப்பதற்கும் இஃது நல்லதொரு வாய்ப்பு. திருக்குறளை செந்தமிழ்த் தேசிய திருநூலாக்குவதற்கும் இந்தச் சூழல் ஓர் நல்ல வாய்ப்பு.

திரு. *கு.சி.வெ.கி ஆசான்* :-

ஆங்கிலப் பள்ளியினர் மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள் என்பது உண்மைதான். " சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்" என்று அறிஞர் அண்ணா எழுதினார். அந்த நாடகத்தில் சந்திர மோகன் ஒரு கதைப்பாத்திரம். சிவாஜிக்கு முடி சூட்ட பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள். அதை சிவாஜி எதிர்த்தாலும் அவரால் இறுதி வரை உறுதியாக இருக்க முடியவில்லை. காசியிலிருந்து பிராமணர்களைக் கொண்டு வந்தார்கள். எப்படியாவது ஒரு சமரசத்திற்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும். இதைச் சந்திர மோகன் விரும்பவில்லை. நீங்கள் வைதீகத்திற்கு சென்று மண்டியிட்டு விடாதீர்கள் என்று சந்திரமோகன் எதிர்க்கிறார். வைதிகத்தோடு ஒன்றிப் போவது சிவாஜிக்கு உடன்பாடு இல்லை என்றாலும் ஆட்சியில் இருக்கவேண்டும் என்றால் சமரசம் செய்தே ஆக வேண்டும். சந்திரமோகனிடம் சிவாஜி இப்படிச் சொல்லுகிறார். "நீ, சொல்லுவது சரி தான்; இன்றைக்கு நாடு இருக்கும் நிலையில் நான் இதை எதிர்க்க முடியாது." சிவாஜியால் பீஜப்பூர் சுல்தானை எதிர்க்க முடிந்தது. மொகலாயப் பேரரசை எதிர்க்க முடிந்தது. எதிர்த்து மராட்டியப் பேரரசை உருவாக்கவும் முடிந்தது. ஆனால் வைதிகத்தை எதிர்க்க முடியவில்லை.

காரணம் என்ன, மக்களுக்கு புரிய வைக்க முடியவில்லை. அறிஞர் அண்ணா இந்தப் பேருண்மையைத்தான் இந்த நாடகத்தில் சொல்கிறார். மக்களுக்கு புரிய வைக்க முடியாததை சட்டத்தால் செய்ய முடியாது. இதைத்தான் இன்று நாம் செய்ய வேண்டியிருக்கிறது.

தமிழ் பயிற்று மொழி வெற்றியடைய வேண்டுமானால் அரசு நிர்வாகம் தமிழில் நடைபெற வேண்டும். மாநில அரசின் அனைத்து அலுவல்களும் தமிழில் நடைபெற வேண்டும். மைய அரசோடு நாம் தமிழில் தொடர்பு கொள்ள வேண்டும். பெற்றோர்களைப் பொறுத்தவரை தம் குழந்தைகளுக்கு வேலை வாய்புக்கு உறுதி வேண்டும். மாநில மற்றும் மைய அரசு அலுவலகங்களில் தமிழில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்க வேண்டும். அரசின் கடமை இது. அதே போல் தமிழ்நாட்டில் தமிழ்ச் சூழலை உருவாக்குவது நம் கடமை. கோவில்களில் தமிழ்வேண்டும்; எல்லா இடங்களிலும் நாம் தமிழில் பேச வேண்டும். பேருந்து முதலிய இடங்களில் தமிழில் பேச வேண்டும். இங்கெல்லாம் ஆங்கிலத்தில் பேச வேண்டியதில்லை.

அணு விஞ்ஞானி அபுல்கலாம் தமிழில் படித்தவர். நகராட்சிப் பள்ளியில் படித்தவர். சர்.சி.வி. இராமனோடு பணியாற்றிய கிருஷ்ணன் தமிழில் படித்தவர். சென்ற இடங்களிலெல்லாம் தமிழ்ச்சங்கம் நிறுவி தமிழை வளர்த்தவர். டெல்லியிலும் கல்கத்தாவிலும் தமிழ்ச் சங்கத்தை அவர் உருவாக்கினார். அவர் பார்ப்பனர். அந்தக் காலத்தில் அவர்களுக்கு தமிழ் உணர்வு இருந்தது. வரவர அவர்களின் திசை மாறிவிட்டது.

புலவர் திருமதி சிவகாமி :-

ஆங்கிலப்பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்பும் பெற்றோர்கள் மயக்கத்திலிருக்கிறார்கள். ஆங்கிலப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க பெற்றோர்கள் பலரையும் கெஞ்சிக் கேட்டு, வருந்திச் சேர்க்கிறார்கள். குழந்தைகள் மூட்டை தூக்கிகளாகிறார்கள். பேருந்துகளில் அவர்கள் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. பள்ளிகளும் வீடுகளும் குழந்தைகளுக்கு சிறைச்சாலைகள். எப்பொழுது பார்த்தாலும் படி, எழுது என்கிறார்கள். பெற்றோர்கள் வீட்டுப் பாடங்களை எழுதிக் கொடுக்கிறார்கள். குழந்தைகள் சரியாக உண்ணுவதில்லை. உடலின் செழுமை மட்டுமல்ல, மனச் செழுமையும்

கெடுகிறது. எதிர்காலத் தமிழர்களை இந்தப் பள்ளிகள் அழிக்கின்றன. ஆங்கிலப் பள்ளியில் படித்து மேலே வரும் குழந்தைகள் தமிழ்ப்பள்ளியில் படிப்பவர்களை இழிவாகப் நினைக்கிறார்கள். இந்தப் போக்கை நாம் மாற்றியாக வேண்டும். தமிழில் படித்தவர்கள் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள். இதற்கு ஏராளமான எடுத்துக் காட்டுகளை நாம் தர முடியும். நிதி நிறுவனங்கள் மோசடி செய்தது போல இப்போது குழந்தைகளிடமும் பெற்றோர்களிடமும் கையெழுத்து வாங்கும் மோசடியைச் செய்கிறார்கள். இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லி பெற்றோர்களின் மன மயக்கத்தை நாம் தீர்க்க வேண்டும்.

திரு. **ஞானி** :-

தமிழ்ச் சான்றோர் பேரவையினர் உண்ணா நோன்பு தொடங்குவதற்கு முன்பு தமிழக முதல்வர் விடுத்த அறிக்கை, தமிழுக்கு, தமிழ் கல்விக்கு முழு அளவில் எதிரான அறிக்கை. எதிரிகளைக் கிளப்பிவிடும் அறிக்கை. ஆனால் முதல்வரின் கருத்தில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சி தருகிறது. குறைந்த அளவுக்கே தமிழுக்கு நலம் பயக்கும் அரசாணையை உறுதியாக இருந்து அரசு நிறைவேற்ற வேண்டுமென்பது நம் விருப்பம்.

நீதிபதி மோகன் குழுவின் அறிக்கை எத்தனையோ குளறுபடிகளைக் கொண்ட அறிக்கை. தமிழ்ச்சான்றோர் பேரவையினர் உண்ணாநோன்பை இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்திருக்க இயலுமானால் 1965-ன் எழுச்சியை மீண்டும் சந்தித்திருக்கக் கூடும். அதற்கான வாய்ப்பை நாம் தவறவிட்டோம்.

கடந்த 30 ஆண்டுகளாக ஆங்கிலப் பள்ளிகளை வளர்த்து விட்டவர்கள், இதனால் ஆதாயம் பெற்றவர்கள் குறித்து இப்போது நம்மால் சிந்திக்காமல் இருக்க முடியாது. தமிழகத்தில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள், 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆங்கிலவழி மழலையர் பள்ளிகள், அதிகாரிகள் தொடங்கி அமைச்சர்கள் வரை எத்தனையோ பரிமாற்றங்கள். கோடிக்கணக்கில் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டனர். இதன் விளைவு தமிழுக்கு, தமிழனுக்கு இன்று நேர்ந்துள்ள அவமரியாதை.

நம் தாய்மொழியாகிய தமிழின் மூலம் கல்வி கற்றால் மட்டுமே நாம்

தமிழராக இருக்கமுடியும். தமிழ் என்றும் தமிழ்ப்பண்பாடு என்றும் தமிழ்நாடு என்றும் உணர்வைப் பெறமுடியும். உலக அளவில் தொன்மையும் மேன்மையும் மிகுந்த நம் தமிழ் மொழியை நாம் இழந்துவிட முடியாது. ஆங்கில வழிப் பள்ளிகளில் தமிழ் உணர்வுக்கு இடமில்லை. திருக்குறளையோ, சிலப்பதிகாரத்தையோ, சங்க இலக்கியத்தையோ, சித்தர் பாடல்களையோ இவர்கள் ஆங்கில மொழிபெயர்ப்பிலேனும் கற்றுத் தருவதில்லை. இப்பள்ளிகளில் கற்கும் குழந்தைகள் தமிழுக்கு, தமிழ்ப் பண்பாட்டிற்கு அன்னியமானவர்கள். தமிழ் வரலாற்றில் இவர்கள் வேர் கொள்வதில்லை. இவர்கள் எப்படித்தான் சுய சிந்தனையைப் பெறுவார்கள். இவர்கள் அப்படி மனிதராவார்கள்.

மெட்ரிக் பள்ளிகளை நிர்வாகம் செய்யும் முதல்வர்களுக்கு கல்விக் கொள்கை என்பது பற்றித் தெரியுமா, கல்வியின் நோக்கம் தான் என்ன. பணத்திற்கும் அதிகாரத்திற்கும் நம் குழந்தைகளை பலியிடுவதற்குப் பெயர் கல்விக் கொள்கையா. இப்பள்ளிகளில் ஆயிரத்திற்கும் இரண்டாயிரத்திற்கும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மனித சுதந்திரம் உண்டா. குறைந்த ஊதியத்தில் மனித தரத்தில் இவர்கள் வாழ்க்கை நடத்த முடியுமா. சுதந்திரம் மறுக்கப்பட்ட இந்த ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு எந்த மனித மாண்பைக் கற்றுத் தருவார்கள். நூற்றுக்கு 98, 99 அல்லது நூற்றுக்கு நூறு மதிப்பெண்களைப் பெறும் முறையில் குழந்தைகளின் மூளையில் விவரங்களைத் திணிப்பது கல்வி ஆகுமா. எந்த மொழியில் கற்பித்தால் மாணவர்கள் மனிதராவார்கள் என்பது குறித்து இந்த ஆசிரியர்கள் பேசிவிட முடியுமா. இந்தக் கொடுமைகள் நம் கண்முன் இன்னும் எத்தனை காலத்திற்கு தொடர வேண்டும். 5ஆம் வகுப்பு வரை தமிழ் என்ற ஏற்பாடு தொடருமா. இத்தகைய கவலைகளோடு தான், இந்த அரசு ஆணை நமக்கு வழங்கியுள்ள மிகக் குறைந்த அளவிலான இந்த வாய்ப்பை நாம் வரவேற்கிறோம்.

முனைவர் திரு. **இராம. திருநாவுக்கரசு** :-

நம் பள்ளிகளில் தமிழை, மொழி என்ற முறையில் கற்றுத் தருவதில்லை. வரலாறு முதலிய பாடங்களை கற்றுத் தருவதைப் போல தமிழையும் கற்றுத் தருகிறார்கள். ஆங்கிலத்தைக்கூட தமிழ் வழியாக கற்றுத் தருகிறார்கள். கற்றுக் கொள்வதற்கான ஒரே வழி மனப்பாடம் செய்வதுதான். ஆங்கிலம் கற்றுக் கொள்வது என்பது வேறு; ஆங்கிலம்

வாயிலாகக் கற்றுக் கொள்வது என்பது வேறு. இதைப் பெற்றோர்களுக்கு நாம் தெளிவுபடுத்த வேண்டும். இந்தத் தெளிவு ஏற்பட்டால் பெற்றோர் தம் குழந்தைகளைத் தமிழ்வழிக் கல்விக்குத்தான் அனுப்புவார்கள்.

திரு. **குலிவ.கி. ஆசான்** :-

இந்த உண்மைகளையெல்லாம் மக்களுக்குத் தெளிய வைக்கவேண்டியவர்கள் அறிவர்தான். அறிவர் தூங்குவதால்தான் மக்களும் தூங்குகிறார்கள். இதனால்தான் பணக்காரனும் தறிகெட்டுப் போகிறான். நிற்கையில் நிமிர்ந்து நில் நடப்பதில் மகிழ்ச்சி கொள் என்று பாரதிதாசன் கூறியது வாழ்வுக்கான தத்துவம். குழந்தைகளுக்குத்தான் இதை பாரதிதாசன் சொன்னார். ஆனால் எல்லோருக்கும் இந்த நீதி தேவை. நாம் நிமிர்ந்து நிற்க வேண்டும்; செயல்படவேண்டும் என்பதைத்தான் பாரதிதாசன் சுருக்கமாகச் சொன்னார். இப்படி இருப்பவன்தான் பணக்காரனுக்கு, பதவிக்காரனுக்கு அடிமையாகாமல் இருக்க முடியும். மேலே இருப்பவன் இன்று தறிகெட்டுப் போய்விட்டான். அறிவாளி பதவிக்கு மண்டியிடுகிறான்; பணத்துக்கு மண்டியிடுகிறான்.

5 ஆம் வகுப்பு வரை தமிழ் என்பதை உறுதியாகப் பற்றிக் கொண்டோம் என்றால் மேலே செல்ல முடியும். இந்த வாய்ப்பை நாம் உறுதியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பேராசிரியர் **கனல்மைந்தன்** :-

வரலாற்றின் சிக்கல்கள் தொடர்ந்து அதிகரிக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்கள் காரணமாக இந்தச் சிக்கல் இப்போது கடுமையாகி இருக்கிறது. உலக நாடுகள் அனைத்தையுமே ஒரு வளைக்குள் இவை சிக்க வைத்திருக்கின்றன. பொருளியல், மொழியியல், பண்பாட்டியல் என்பனவற்றின்மேல் இவற்றின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. உலக நாடுகள் தவித்துக் கொண்டிக்கின்றன. வடமொழி ஆதிக்கத்திற்கெதிராக நெடுங்காலமாக நாம் போராடி இந்த நூற்றாண்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். இந்த நூற்றாண்டில் நமக்கு ஒரு புதிய சவாலாக ஆங்கிலம் வந்திருக்கிறது. ஆங்கிலேயனோடு இந்த மொழி போய் விடவில்லை. இன்று உலகத் தமிழன் உருவாகிக் கொண்டிருக்கிறான். கணனி கல்வி இல்லாமல் இன்று முடியாது. அமெரிக்க மருத்துவர்களின் ஆங்கிலமொழி வாயிலான நோய்க் குறிப்புக்களை இங்கிருந்து

மொழியாக்கம் செய்து அனுப்புகிறார்கள். இந்தியாவிலேயே அதிக அளவில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் தமிழகத்திலிருக்கிறார்கள். இவர்களை அமெரிக்கர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தனிப்பட்ட ஒருவரை விமர்சனம் செய்வதைக் காட்டிலும் இன்றைய உலகச் சூழலில் தமிழ்மொழிக்கு நேர்ந்துள்ள இந்த நெருக்கடியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவிலேயே தமிழில் இணையத்தை இங்குதான் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இந்த வரலாற்றுச் சாதனையை நாம் பாராட்ட வேண்டும். தமிழ்மொழிக்கு உயிர் இருக்கிறது என்பதை இந்தச் சாதனை மெய்ப்பிக்கிறது. இதற்கு காரணம் பன்னாட்டுத் தமிழர்கள். பன்னாட்டுத் தமிழன் – உலகத் தமிழன் உருவாகியிருக்கிறான்; அவன்தான் இந்தச் சாதனையைச் செய்திருக்கிறான். சிவாஜிக்கு ஒரு சந்திரமோகன் இருந்தான். கலைஞருக்கு அருகில் ஒரு சந்திரமோகன் இல்லை என்பது ஒரு வரலாற்றுச் சோகம். கலைஞரிடத்தில் இப்பொழுது குழப்பம் இல்லை. தெளிவாகவே தன் அறிக்கையில் கூறியிருக்கிறார். தனித்தமிழ்நாட்டில் தான் அனைத்து மட்டங்களிலும் தமிழ் இடம்பெறும் என்று சொல்லியிருக்கிறார். தனித்தமிழ் நாடு என்பதை நாங்கள் கைவிட்டு விட்டோம். முன்பு அண்ணா கூறியது போல நாங்கள் விட்டு விட்டோம் என்பதால் சிக்கல் தீர்ந்து விடவில்லை. சிக்கல் அப்படியே இருக்கிறது. இது வரலாற்றுச் சிக்கல். இதை தொலைதூரப் பார்வையோடு பார்க்கவேண்டும். சிவாஜிக்கு பதவி ஆசை இருந்தது. பதவியில் அமருபவர்கள் சிக்கலைத் தீர்க்க முடியாது. பெரியாருக்கு இந்த உண்மை தெளிவாகத் தெரிந்தது. ஆகவேதான் அவர் பதவியில் அமரவில்லை. கொள்கை பேசிக் கொண்டிருப்பவனை முதலாளியம் பதவியில் அமர்த்தும். அதன்பிறகு அவன் கொள்கையைக் கைவிடுவான் முதலாளிய அரசியலின் ஆற்றல் இத்தகையது என்பதை இன்றும் நாம் பார்க்கிறோம்.

இந்த வரலாற்று உண்மையைப் புரிந்துகொண்ட நிலையில் குழந்தைகளையோ பெற்றோர்களையோ நம்மால் கோபிக்க முடியவில்லை. எல்லாவற்றையும் சரக்காக விற்பவனைப் பொருளாக முதலாளியம் மாற்றுகிறது. ஆங்கிலம் என்பது இப்படித்தான் இங்கு விற்பனைப் பொருள் ஆகியிருக்கிறது. மெட்ரிக் பள்ளிகள் கொள்ளையடிக்கிறார்கள். இந்தச் சூழலில் நாம் நிதானமாகத் தான் செல்லவேண்டும். தமிழ்ப் பற்றுடையவர்களைத் தீவிரவாதிகள் போல கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்ப் புலவர்களுக்கு தீவிரம் கூடாது என்றார். நாமும் மெல்ல எரியவேண்டும். இன்றைய அறிவியல், வேகம் பெற்றிருக்கும் சூழலில்

அமெரிக்காவுக்கு குழந்தைகளை அனுப்பவேண்டாம் என்று சொல்வது பொருந்தாது. உலகத்தோடு நாம் ஒட்ட ஒழுக வேண்டும். உலகம் கணினியோடு போய்க் கொண்டிருக்கிறது. நாமும் அதனோடு போகவேண்டும். அறிவியலோடுதான் எல்லோரும் போகவேண்டிய திருக்கிறது. அடுத்த ஆயிரமாம் ஆண்டில் இந்தச் சிக்கலுக்கு விடை கிடைக்க வேண்டும். தமிழன் சாகமாட்டான்; தமிழும் சாகாது. மாவோ கூறிய அந்த மூடக் கிழவனைப் போல, நாம் செயல்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். ஆரியத்திற்கெதிராக திராவிடம் தேவைப்பட்டதுபோல, இன்று ஆங்கிலத்திற்கெதிராக தமிழை நாம் உயர்த்திப் பிடிக்கிறோம். வரலாற்று நெருக்கடி, சித்தர்களைத் தோற்றுவித்தது. உண்ணாநோன்பு இருந்த சான்றோர்கள் நோன்பை இவ்வளவு விரைவில் முடித்திருக்க வேண்டாம். வள்ளலாரும் பாரதியாரும் பாரதிதாசனும் வளர்த்த தமிழுக்கு அழிவு இருக்க முடியாது.

புலவர் இளங்கீரன் :-

"60 களில் தமிழை கல்லூரிகளில் பயிற்று மொழி ஆக்குவதற்காக பெரு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தப் பெரு முயற்சிகளை எதிர்த்தவர்கள் இன்று அரசியலில் உச்சத்திலிருக்கிறார்கள். ஈரோட்டில் நடைபெற்ற தமிழாசிரியர்களின், தமிழ் எழுச்சி மாநாட்டில் பேசிய கல்வி அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தைச் சார்ந்துதான் பேசினார். யார் தமிழை வளர்ப்பார்கள், தூக்கி பிடிப்பார்கள் என்று நாம் கருதினோமோ அவர்களெல்லாம் ஆங்கிலத்தைத் தான் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். 1965ல் தமிழ்தாயைத்தான் வரைபடத்தில் வரைந்து தூக்கிக் கொண்டு வந்தார்கள். இந்தி வந்தால் தமிழ் அழியும் என்றார்கள். அந்தப் போராட்டத்தின் பயனை இவர்கள் இன்றும் அனுபவிக்கிறார்கள். வந்த வேகத்திலேயே தமிழின் வளர்ச்சி காணும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருக்கவேண்டும். அப்படிச் செயல் பட்டிருந்தால் இன்றுள்ள இழிநிலை நமக்கு ஏற்பட்டிருக்காது.1935 முதலே நம் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாயிற்று. "47க்குப் பிறகு எல்லா மாநிலங்களிலும் அவரவர் தாய் மொழி பயிற்று மொழியாயிற்று.

இன்று இந்த நிலை நமக்கில்லை. சேரி குழந்தைகளை கூட இன்று ஆங்கிலப்பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். வசதிமிக்கவர்களும்,

வசதியில்லாதவர்களும் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். இந்த மக்களை நாம் இதற்காகக் குறை சொல்ல முடியாது. இந்தி வேண்டாம் என்று சொன்னோம் அதற்காக ஆங்கிலத்தைத்தான் திணிக்க வேண்டுமா, இப்படி ஒரு கல்வி முறையா.

கலைஞரை நாம் அய்யுறவில்லை அவரது தமிழ்ப்பற்று அய்யத்திற்கு இடமில்லாதது. தம் வாழ் நாளில் தமிழுக்கு ஏற்றம் தரவேண்டும் என்றும் இன்னும் சில அமைச்சர்களும் விரும்புகிறார்கள். மைய அரசில் அனைத்து மாநில மொழிகளும் இடம் பெற்றாலொழிய தமிழைப் பயிற்று மொழியாக்கும் எண்ணம் நிறைவேறாது. இன்று சட்டம் நமக்குச் சாதகமாக இல்லை. தமிழ் மொழியில் பயின்றவருக்குத்தான் வேலை வாய்ப்பு என்று சட்டம் வரவேண்டும். இப்படி இல்லை என்றால் மொட்டு மலர் பள்ளிகள் முதற்கொண்டு தமிழுக்கு இடம் இராது. அரசு பள்ளிகளில் மாணவர் தொகை மிகமிகக் குறைந்து வருகிறது. 10, 15 மாணவர்களை வைத்துக் கொண்டு பெயரளவில் ஒரு பள்ளி நடக்கிறது. இப்பள்ளிகளை மூடவேண்டுமென்று ஆய்வாளர்கள் பரிந்துரை செய்கிறார்கள். இந்த நிலை ஏன் ஏற்பட்டது. உணர்வோடு உள்ள தமிழர்கள் ஒன்று சேருவதில்லை. நம்மிடம் வாக்குப் பெற்று சென்றவர்களே ஆங்கிலத்தில் படித்தால் என்ன என்று கேட்கிறார்கள். தமிழைப் பயிற்று மொழி ஆக்குவதற்காக உயிரைக் கொடுக்கவும் நான் அணியமாக உள்ளேன். அன்று நான் மா.பொ.சியிடம் பாடம் கற்றேன். பயிற்று மொழிக்காக, எத்தனையோ கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்தினார். பக்தவத்சலம் அவர்களை அருகில் வைத்துக் கொண்டே சம்மட்டியில் அடிப்பது போலக் கேள்வி கேட்டார். மா.பொ.சி யை மக்கள் ஆதரிக்கவில்லை. அரசியல் அரசியல் என்று சொல்லி கட்சியைத்தான் மக்கள் ஆதரித்தார்கள். ஆட்சியில் அமர்த்தினார்கள். இன்று ஆட்சியில் உள்ளவர்களில் எத்தனை பேருக்கு இலக்கியம் தெரியும்; எத்தனை பேர்களுக்கு தமிழ்உணர்வு இருக்கிறது. இவர்களில் எத்தனைபேர் தமிழுக்காக, மக்களுக்காக, சிறை சென்றவர்கள். இந்த உண்மைகளை எல்லாம் இன்று மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். தமிழாசிரியர்களைக் கெஞ்சவேண்டிய நிலை இன்று நமக்கு ஏற்பட்டுள்ளது. தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. எங்கிருந்து இவர்களுக்குத் தமிழ் உணர்வு வரும்.

புலவரேறு **மருதவாணன்** :-

தமிழ் பயிற்று மொழி வெற்றியடைய வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும். ஆங்கிலம் வாயிலாக பயிற்றுவிக்கப்படுகிற மாணவனுக்கு தாய்மொழிப்பற்றோ தாய்நாட்டுப்பற்றோ ஏற்பட வழியில்லை. இவர்களுக்கு ஏற்படுவது பணப்பற்று ஒன்றே. புரிந்துகொண்டும் அவர்கள் படிப்பதில்லை இப்படிப் பல தவறுகள் ஏற்படுகின்றன. இதற்கு முதற்காரணம் ஆசிரியர்கள். தமிழ் வாயிலாக தொடக்கப் பள்ளிகளில் கற்றுத் தருகிற ஆசிரியர்கள், பாடமே நடத்துவதில்லை. பெரும்பான்மையான பள்ளிகளில் ஆசிரியர் பாடம் நடத்துவதில்லை. இந்தப் பள்ளிகளுக்குப் பெற்றோர், தம் குழந்தைகளை அனுப்புவதில்லை. எழுத்துக்களைக்கூட இவர்கள் கற்றுத் தருவதில்லை. ஆனால் ஊதியமோ ஐந்தாயிரம் – ஆறாயிரம். ஆசிரியர்களுக்கு மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இருந்தால்தான் மாணவர்களுக்கு ஊட்ட முடியும். எட்டாம் வகுப்பு வரையில் படித்தவர்கள், நாங்கள் படித்தபோது, பாடம் நடத்தினார்கள். இப்பொழுது எம்.ஏ. படித்தவர்கள் பாடமே நடத்துவதில்லை. பலர் பள்ளிக்கே வருவதில்லை, வந்தாலும் வகுப்புகளுக்குச் செல்வதில்லை, சென்றாலும் பாடம் நடத்துவதில்லை. நாங்கள் ஒரு இயக்கம் தொடங்கியிருக்கிறோம். திருக்குறளை எல்லாப் பள்ளிகளிலும் நாங்களே சென்று கற்பிக்க முடிவு செய்துள்ளோம். கோவில்களில் தமிழில்தான் வழிபாடு நடைபெறவேண்டும். இதற்கான கிளர்ச்சியை உருவாக்குவது எங்கள் நோக்கம். பள்ளிகள், கல்லூரிகள், சிற்றூர்கள், பேரூர்கள் என்று எல்லா இடங்களுக்கும் நாங்கள் செல்வோம். அனைவரும் எங்களோடு இணைந்து கொள்ள வேண்டும். தாய்மொழியில் கற்பவன்தான் அறிவியலில் ஆய்வு செய்ய முடியும். செர்மானியனும் பிரெஞ்சுக்காரனும் இதனால்தான் முன்னேறியிருக்கிறான். தாய்மொழியில் படிப்பவன் தாழ்ந்து விடுவதில்லை. மக்களுக்கு இதை நாம் சொல்லவேண்டும்.

அறிஞர் அண்ணா தாய்மொழியில்தான் கற்றார். அவருக்கு நிகராக ஆங்கிலமொழியில் யார் பேசமுடியும். ஆர்.கே. சண்முகமும் தமிழில்தான் கற்றார். ஆங்கில மொழியில் அவரளவுக்கு சிறப்பாகப் பேசியவர் எவருமில்லை. அபுல்கலாம் தமிழில்தான் படித்தார். தாய்மொழி வாயிலாகப் படித்தவன் உலகில் எவனுக்கும் தாழ்ந்தவனல்ல. தமிழ் வாயிலாக இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வு எழுதலாம், காவல்துறைக்கு தேர்வு எழுதலாம். இதற்குத் தடை எதுவுமில்லை. தமிழில் படித்து ஆட்சியாளராக வரமுடியும்.

ஆசிரியர்களுக்கு மொழிப்பற்று தேவை; இவர்களிடம் இப்போதிருப்பது பணப்பற்றுத்தான். இவர்களே முதலாளிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எப்படி ஆசிரியராக முடியும். ஆசிரியர்கள் நிறைய ஊதியம் வாங்குகிறார்கள். தமிழுக்காக, திருக்குறளைப் பரப்புவதற்காக பணியாற்றுபவர்களுக்கு இவர்கள் நிதி உதவி செய்யமுடியும். தமிழ் இயக்கம் வெற்றி அடைவதற்கு தமிழாசிரியர்கள் முன்வரவேண்டும். இயக்க உணர்வும் தமிழன் என்ற இன உணர்வும் இல்லையென்றால் நாம் உயிர்பெற முடியாது. அடுத்த கல்வியாண்டு தொடங்கும்வரை சிற்றூர்கள், பேரூர்கள் எங்கும் சென்று பயிற்றுமொழி தமிழ் என்பது குறித்து நாம் பேசவேண்டும். பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். மக்களிடத்தில் இதைச் சொல்லவேண்டும். மக்கள் இயக்கமாக இதை மாற்றவேண்டும். ஆங்கிலப் பள்ளிகள் கல்விக்காக நடத்தப் பெறுவதில்லை. கொள்ளையடிப்பதற்காகத் தான் பள்ளிகளை உருவாக்கியிருக்கிறார்கள். அங்கு ஆயிரம் கொடுத்தால் உழைக்கிறார்கள். இங்கு பத்தாயிரம் பெற்றுக் கொண்டு ஒருமணிநேரம் கூட உழைப்பதில்லை. அங்கே அடிமையாக இருக்கிறான். இங்கே உரிமையோடு இருக்கிறான். ஆனால் உழைப்பதில்லை. தமிழைச் சொல்லி பிழைப்பு நடத்துகிறவனுக்கும் மானமில்லை. மாணவர்களுக்கு இவர்கள் தமிழ் உணர்வை ஊட்டுவதில்லை. என்னிடம் படித்த எத்தனையோ மாணவர்கள் உயர்ந்த பதவிகளில் இருக்கிறார்கள். அருமையாக ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆங்கிலத்தில் படித்தால்தான் அமெரிக்காவுக்குச் செல்ல முடியும் என்ற கருத்து தவறு. எனது மாணவர்களில் எத்தனையோபேர் சிறந்த மருத்துவர்களாக, பொறியியலாளர்களாக, வல்லுநர்களாக வெளிநாடுகளில் பணியாற்றுகிறார்கள். இவர்களெல்லாம் 11 ஆம் வகுப்பு வரை தமிழில் தான் படித்தார்கள். அயல்நாடுகளில் அடிமையாக இருப்பதை நான் வெறுக்கிறேன். ஒரு பத்தாண்டுகள் பணிபுரிந்துவிட்டு, இங்கே வந்துவிட வேண்டும். அடிமையாக இருந்து வாழ்வதைவிட செத்துப் போவது நல்லது. இந்த உணர்வுகளையெல்லாம் இளைஞர்களிடம் புகுத்தவேண்டும். சிறுசிறு நூல்கள் எழுதி சிற்றூர்களுக்கும் பேரூர்களுக்கும் எடுத்துச் செல்வோம். இலவயமாகவும் கொடுப்போம். இதற்கெல்லாம் நீங்கள் உதவி செய்ய வேண்டும். நமக்குள் ஆயிரம் வேறுபாடுகளிருந்தாலும் மொழி என்ற முறையில் ஒன்றுபட வேண்டும். தாய்மொழியில் கற்பிப்பதற்கான இந்த வாய்ப்பை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு நாம் பணிபுரிய வேண்டும். தமிழுக்காக உயிர் விடுவது தேவைதான் என்றால், அதையும் நாம் செய்தாக வேண்டும்.

திரு. நித்திலன்

கோவை மாவட்டத்தில் உயர்நிலைப் பள்ளிகள் நூற்றி இருபது, மேல்நிலைப் பள்ளிகள் நூற்றி முப்பத்தி ஐந்து, மெட்ரிக் பள்ளிகள் நூற்றிப் பத்து, ஆக மூன்றில் ஒரு மாணவர் ஆங்கிலப் பள்ளியில் படிக்கிறார்கள். தாய்தந்தையர் இதை விரும்புகிறார்கள். ஒரேநேரத்தில் இந்தச் சிக்கலைத் தீர்க்கமுடியாது. யதார்த்த நிலையை மறுக்கமுடியாது.

ஆசிரியர்களுக்கு அரசு நல்ல ஊதியம் தருகிறது. ஆனால் ஆசிரியர்கள் தம் கடமையைச் செய்வதில்லை. பணத்தைப் பெற்றுக் கொண்டார்கள். குழந்தைகளைப் பயிற்றுவிக்க மறந்தார்கள். அதனால் அதன் விளைவை இன்று பார்க்கிறோம். சத்துணவில் ஊழல். இந்த உணவை எந்தக் குழந்தையாலும் உண்ண முடியாது. அரசு கொடுக்கிறது. அதை வாங்கி அனுபவிக்கிறோம். மக்களுக்குத் துரோகம் செய்கிறோம். இதன் விளைவுதான் இன்று பெருகி வரும் ஆங்கிலப் பள்ளிகள். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கல்லூரிகளில் தமிழை பயிற்று மொழியாக்கும் திட்டத்தை சி. சுப்பிரமணியம் கொண்டுவந்தார். ஒருசமயம் அவர் அச்சத்தை வெளியிட்டபோது அஞ்சவேண்டாம் என்றார் தி.சு. அவினாசிலிங்கம். பக்தவத்சலம் ஆட்சிக்கு வந்தார். பிறகு தொடர்ந்து திராவிடக் கட்சிகள் ஆட்சியிலிருந்தன. இப்பொழுது அவை ஆல்போல் தழைத்திருக்கின்றன. அவரவர்கள் கையில் ஏராளமான பணம் குவிந்திருக்கின்றது. அவர்கள் எதையும் செய்யமுடியும். இப்பொழுது கூச்சல் எழுப்பிப் பயனில்லை.

நாம் செல்வாக்குடையவர்கள்தான். ஆனால் மக்கள் தலைவர்கள் எனப்படுவோர் மக்களைத் தம் வசத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தத் தலைவர்கள் இன்றும் ஆங்கிலத்தை எதிர்த்துப் பேசவில்லை. தி.மு.க.வுக்கு உள்ளேகூட ஒரே கருத்தில்லை. தமிழ் மாநிலக் கட்சியோ, அ.தி.மு.க. வோ ஆதரிப்பதாகத் தெரியவில்லை. இவர்களின் கைகளில்தான் மக்கள் இருக்கிறார்கள். இந்த மக்களை எதிர்த்துப் பேசி நாம் என்ன செய்ய முடியும்.

தமிழ்வழி பள்ளிகளில் ஆசிரியர்கள் உழைக்க மறுக்கிறார்கள். மெட்ரிக் பள்ளிகளில் இருபது கட்டுரைகள் எழுதுகிறார்கள். இங்கே பத்துக் கட்டுரைகள் என்றாலும் மறுக்கிறார்கள். தலைமை ஆசிரியரை

எதிர்க்கிறார்கள். அதிக அளவில் விடுப்பு எடுக்கிறார்கள். வரலாறு கற்றுத்தரும் ஆசிரியர் வரலாற்று உணர்வையோ, நாட்டுப்பற்றையோ கற்றுத் தருவதில்லை. வெறும் குறிப்புக்கள் தருகிறார்கள். கேள்விக்குப் பதில் கற்பிக்கிறார்கள். மொழி ஆசிரியரும் இதைத்தான் செய்கிறார். இவர்களால் மனிதர்களை உருவாக்க முடியாது.

உலகமயமாக்கம் என்பதில் ஆங்கிலத்திற்கும் ஒரு பங்குண்டு. இதை நாம் மறுக்க முடியாது. இதனால்தான் சீனாவில் தொலைக்காட்சியில் நாள்தோறும் ஆங்கிலம் கற்றுத் தருகிறார்கள். உலக முழுவதும் வர்த்தகம் செய்ய ஆங்கிலம் ஒரு கருவியாக இருக்கிறது. இதற்காக ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்றுக் கொள்வதில் தவறில்லை.

நாம் கற்கும்பொழுது கல்வி மொழியாக தமிழ் இருந்தது. அதை நாம் இழந்துவிட்டோம். தமிழையே பேசி வளர்ந்தவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஆங்கிலத்தைத் தான் ஆதரித்தார்கள். இவையெல்லாம் யதார்த்தமான உண்மைகள். எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. அறுபத்தி ஐந்தில் சோஷலிஸம் என்றோம். இப்பொழுது சந்தைப் பொருளாதாரம். முன்பு இலவசக் கல்வி; இன்று என் குழந்தைக்கு இலவசக் கல்வி வேண்டாம். பணம் கொடுத்துப் படிக்க வைக்கிறேன் என்ற நிலை. அன்று தேசிய மயம், இப்பொழுது எல்லாமே தனியார் மயம். எல்லாமே தன்னலத்தின் அடிப்படையில். வரலாற்று நோக்கு இல்லாமல் தலைகீழாய் மாறியிருக்கின்றன. வெறும் உணர்ச்சிகளை மட்டும் ஊட்டி நாம் வெற்றி பெறமுடியாது. அறிவு ரீதியாகச் சிந்தித்து நாம் செயல்பட வேண்டும்.

மருத்துவர் கோபி :-

மெட்ரிக் பள்ளிகளை வளர்த்தவர்களின் நெஞ்சில் தான் இந்தக் கடா பாய்கிறது. இப்பொழுது அந்தக் கடாவைப் பலி கொடுக்கத்தான் வேண்டும். நம் நாட்டுக்கு ஆங்கிலம் தேவைதானா, என்ற அடிப்படை கேள்வியை நான் எழுப்ப விரும்புகிறேன். அதிலும் 2வது மொழியாக ஆங்கிலம் தேவைதானா? 3ஆம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் தேவைதானா. வேற்றுமொழிகள் தேவைதான்; ஆனால் அது எந்தச் சந்தர்ப்பத்தில் கற்றுத் தரவேண்டும். பல்கலைக் கழக அளவில் ஒரு ஆறு மாத கால அளவில் ஆங்கிலம் மட்டுமல்லாமல் வேறு எந்த மொழியையும் கற்பிக்க வேண்டும். 3–ஆவது வகுப்பில் ஆங்கிலம் கற்றுத் தருவது குழந்தைகளின் மூளை

வளர்ச்சியைத் தடுக்கத்தான் செய்யும். சொந்த தாய்மொழியில் தான் சிந்திக்கமுடியும். அறிவு வளர்ச்சியைப் பெறமுடியும். அறிவியல் நமக்குத் தேவை என்றால் தாய்மொழியில் தான் அறிவியலைக் கற்கவேண்டும். 21ஆம் நூற்றாண்டில் தமிழ்மொழி நிற்கவேண்டுமென்றால் தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும். தாய் தமிழ் பள்ளிகள் என்றாலும் 3ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்றுத் தருவதை நாம் எதிர்க்க வேண்டும். ஆங்கிலேயன் தனக்குத் தேவையான எழுத்தர்களை உற்பத்தி செய்வதற்காக ஆங்கிலத்தைக் கற்பித்தான். இதைப்போலவே பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தை செயல்படுத்துவதற்காகவே இங்கு ஆங்கிலக் கல்வி பயன்படும். தமிழின் வளர்ச்சிக்கு இது பயன்படாது. தமிழர்களை கூலி அடிமைகளாக்குவதற்கே ஆங்கிலம் இங்கு பயன்படும். இந்தச் சிந்தனைகளை இப்பொழுதே நாம் மக்கள் மத்தியில் பரப்பவேண்டும். இல்லையென்றால் நமக்கு எதிர்காலம் இல்லை. வெளிநாடுகளுக்கு நம் குழந்தைகள் சென்று சம்பாதிக்கிறார்கள் என்பதுகூட ஆங்கில அறிவால் இல்லை. பொருள் அறிவால் தான் சம்பாதிக்கிறார்கள். அரபு நாடுகளுக்குச் செல்வர்களுக்குத் தொழில்கல்விதான் தெரியும்; ஆங்கிலம் தெரியாது. நம்மை அடிமைப் படுத்துவதற்கு ஆங்கில மொழியை நாம் கற்க வேண்டியதில்லை.

இரணியன் :-

என்றோ தொடங்கி, இன்று வலுவாக நடந்து கொண்டிருப்பது மூன்றாம் உலகப்போர். இதில் அடிவாங்குவன வளரும் நாடுகள். அதாவது ஏழை நாடுகள். அடிப்பவை வல்லரசுகள்.

இந்த அடிகள் நம் உடலின்மேல் விழுவன அல்ல. நம் உள்ளத்தின்மேல் விழுவன. நம் அறிவின் மேல் விழுவன. நமது மொழியின் மேல், பண்பாட்டின் மேல் விழுவன.

இந்த அடி விழவிழ, "நமது" என்று சொல்லக்கூடிய ஒவ்வொன்றையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம். நம் கண்முன்னே நம்முடைய எல்லாம் ஒவ்வொன்றாகப் பறிபோய்க் கொண்டுள்ளன.

நமது நிலம், நமது நீர், நம் மரங்கள் செடிகள் கொடிகள், காய்கனிகள் தவசங்கள், நமது இயற்கை அரண், நமது பண்பாடு, நமது இருப்பு, நமது மொழி எல்லாவற்றையும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம்.

நாம் இழந்து வருவதை நம் அண்ணனோ, தம்பியோ, உற்றார் உறவினரோ அறிந்து கொள்வது கடினமாக உள்ளது.

நம்மைச் சிரிக்கவைத்து, நம்மைக் கொண்டாட வைத்து, நம்மைக் குதூகலிக்க வைத்து, நமக்குப் புத்தாடைகளை அணியவைத்து, நறுமணப் பொடிகளை நம்மீது பூசிவிட்டு, ஃபேர் அன் லவ்லி தடவி விட்டு, பெப்சியும், கொக்கோ கோலாவும் குடிக்கவைத்து, நாம் கிறங்கி கிடக்கும்போதெல்லாம் நம்முடையன ஒவ்வொன்றாய்ப் பறிபோகின்றன.

இந்த வகைப் பட்டதுதான் நமது பண்பாடும், நமது பண்பாட்டை ஆரத் தழுவியுள்ள நமது மொழியும்.

உலகில் எத்தனையோ ஏழை இனங்கள் "தமது" என்று சொல்லக்கூடிய எதை இழந்தபோதும் ஏமாற்றத்தோடே துவண்டு கிடந்துள்ளன. ஆனால், அவர்களின் மொழி என்னும் கட்டுமானம் தகர்க்கப்பட்டபோது சிறுத்தைகளாய்ச் சீறி எழுந்துள்ளன.

மொழி என்னும் கட்டுமானம் தகர்க்கப்படும்போதுகூட, துவண்டும் தூங்கியும் கிடப்பது தமிழர் சமூகம் மட்டுமே.

ஏன் தமிழினம் இப்படியாகி விட்டது?

தமிழகம் வல்லரசுகளின் கட்டுப்பாடற்ற வேட்டைக்காடு. வல்லரசுகளின் வாலரசாகிய பாரதீய சர்க்காருக்கும், அதன் நாவும் கண்களுமாய்த்திகழும் சனாதன அதர்ம இந்துத்துவக் கும்பலுக்கும், தமிழினம், கண்களும் செவிகளும் சிந்தையுமற்ற நல்லதோர் முரட்டு அடிமை.

இந்த முரட்டு அடிமை உண்மையைக் கண்டு கொள்ளாமல் இருக்கவும் உண்மையைக் கேட்காமல் இருக்கவும், உண்மையைச் சிந்திக்காமல் வாழவும் வேண்டுமானால், இது தன்மொழியைத் துறந்துவிடவேண்டும்.

இது தன்மொழியைத் துறந்தால் மட்டுமே பாரதீயனாய்ப் பரிணமிக்கமுடியும். அப்போதுதான் பன்னாட்டு அடிமையாய்ப் பாடுபட முடியும்.

தமிழினம் தன்மொழியை, இன உணர்வை, பண்பாட்டு

விழுமியத்தைக் கைக்கொண்டு விடுமானால் பன்னாட்டு அடிமைத் தளையை உடைத்து வீசும். பாரதீய மோசடியைக் காறி உமிழும்.

இந்த நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்பதால்தான் வட்டிக்கடைக்காரர்கள், கள்ள நோட்டுப் பேர்வழிகள், சமூகச் சுரண்டல்காரர்கள், குறுக்கு வழியில் பணம் திரட்டிய சமூகப் பகைவர்கள் எல்லோரும் ஆங்கில வழிப் பள்ளிகளை ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த ஆங்கில வழிப் பள்ளி என்பது மிகக் கொடூரமான பண்பாட்டுப் போர்க் கருவியாகும்.

"குகி வா தியாங்கோ" என்ற உலகப் புகழ் பெற்ற கீன்ய தேசத்து எழுத்தாளர் கூறுகிறார்:

> "மக்களுக்குத் தங்கள் பெயர்களின் மீதும் தங்கள் பரம்பரையின் மீதும், மொழியின் மீதும், சூழ்நிலையின் மீதும், ஒற்றுமையின் மீதும், தங்கள் வலிமையின் மீதும் இறுதியில் தங்களின் மீதும், இருக்கின்ற பற்றினை, ஈடுபாட்டை, நம்பிக்கையைத் துடைத்தெறிவதுதான் இந்தப் பண்பாட்டுப் போர் கருவியின் நோக்கமாகும்."

நம்மை தாக்கும் போர்க் கருவியை தமிழர்களாகிய நாம் அடையாளம் காண வேண்டாமா?

கு.கி., கூறுகிறார்:

"வரலாற்றில் மொழி என்பது மக்களின் ஒன்று திரண்ட பட்டறிவு, ஒன்றுபட்ட தன்னுணர்வு ஆகியவற்றின் சேமிப்புக் கிடங்கு" என்று.

ஒடுக்கு முறைக்கு ஆளான தமிழ் மக்களுக்கு அவர்தம் சொந்த மொழியை கல்வியிலும், பேச்சு வழக்கிலும் மறுப்பதன் மூலம், தமிழரின் ஒன்றுதிரண்ட பட்டறிவை, ஒன்றுபட்ட தன்னுணர்வை, அறிந்துணர்வின் சேமிப்புக் கிடங்கை உலகமயமாக்கும் சமூகப்பகைவர்கள் மறுக்கிறார்கள் – அப்புறப்படுத்துகிறார்கள் என்பது விளங்கவில்லையா? ஆண்டானின் மொழியை அடிமைக்குப் பழக்குவது எதன்பொருட்டு என்பது தெளிவாகவில்லையா?

சுகாட்லாந்தில் "கெய்லிக்" மக்களின் கடைசி எழுச்சி 1746இல் ஒடுக்கப்பட்டது. சுகாட்லாந்தின் 1872 கல்விச்சட்டம் கெய்லிக்மொழி பேசுவதைத் தடை செய்தது. கவனக் குறைவாகப் பள்ளிகளில் கெய்லிக் மொழி பேசிய குழந்தைகளுக்குக் கடுமையான அடி உதைகள் தரப்பட்டன. லூய் தீவில் தாய்மொழி பேசியோர் விறகுக் கட்டுகளைச் சுமக்கவைக்கப்பட்டனர்.

1536ஆம் ஆண்டிலேயே "வேல்சு" இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. வேல்சை அடக்கியாண்ட ஆங்கில முதலாளிகளுக்கு, வேல்சு மொழி சிக்கலை உண்டாக்கியது. எனவே வேல்சு மொழியை வேல்சு நாட்டின் பள்ளிகளிலிருந்து அகற்றினர். விளையாடுகளங்களில் கூட வேல்சு மொழியைக் குழந்தைகள் பேசக் கூடாது எனத் தடை விதித்தனர். பள்ளிகள் அனைத்தும் ஆங்கிலமயமாயின.

"கைப்பிடி அளவே உள்ள ஆங்கிலப் பள்ளிகளைக் கொண்டு, காவல் துறையை விட, படை அமைப்பைவிட, மிகத் திறமையாகவும், செலவில்லாமலும், வேல்சு மக்களை ஆங்கிலம் மட்டுமே பேசுகின்ற மக்களாக மாற்றமுடியும்: ஆங்கில நாகரிகத்திற்குள், ஆங்கில பண்பாட்டிற்குள் அவர்களைக் கொண்டு வர முடியும்; பிரிட்டன் பொருளியல் நலத்திற்கு அவர்களை உறுதுணையாய்ச் செய்விக்க முடியும்" என்று ஆங்கிலப் பாராளுமன்றத்திலேயே பேசினர். செயல்படுத்தினர். விளைவு, வேல்சு தன்னை இழந்தது, தன் மொழியை, பண்பாட்டை இழந்தது. வேல்சு நாட்டுச் சுரங்கங்களும் கனவகைத் தொழில்களும் பிரிட்டீசுப் பொருளியலில் முதன்மைப் பங்குபெறத் தொடங்கின.

கேவத் என்ற எழுத்தாளர் கூறுகிறார் (கு.கி.யின் மேற்கோள் இது):
"மொழி ஒரு தற்காப்புப் படை.
நம்மை நாம் இழக்காமல் இருப்பதற்கான அரண்.
அயலார் நம்மிடமிருந்து பிடுங்க முயலும் நம் அடித்தளம்.
மொழியே மக்களின் புகலிடம்."

ஆனால் தமிழர்களாகிய நாம், நம் தற்காப்புப் படையை, நம்மை நாம் இழக்காமல் இருப்பதற்கான அரணை, நம் அடித்தளத்தை, நம் மக்களின் புகலிடத்தை இழக்கத் துணிந்திருக்கிறோம்.

ஆங்கிலப் பள்ளியின் நோக்கமென்ன?

அய்ரோப்பிய முறையில், ஒரு புதுவகை மேட்டுக் குடியினரைக் திட்டமிட்டு உருவாக்குவதுதான். தான் யாரென்றோ, தன் நிலத்தின் இனத்தின், மொழியின் பரம்பரை செழுமை இன்னதென்றோ தெரியாத குருட்டு அடிமை ஊழியரை உருவாக்குவதுதான்.

"அயலவரின் மொழி, மக்களை அடிமைப் படுத்தி வைக்கவே பயன்படும். நம் சொந்தத் தோற்றத்தை வடிவமைத்துக்கொள்ள நமது சொந்த மொழியே பயன்தரவல்லது." இது ஆப்பிரிக்க எழுத்தாளர்களின் பறைமுழக்கம்.

மக்களுக்கு முன்னேற்றம் தராத வளர்ச்சியைக் கொண்டு வருவதற்காக ஆங்கிலத்தைத் தூக்கி கொண்டு பலர் புறப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் மனிதச் சமன்மை, மனித நீதி, சமூக அமைதி, மக்கள் முன்னேற்றம் இவற்றை விரும்புவோர், உலகம் முழுதும் தாய்மொழி மூலம் கற்பதையே விரும்புகிறார்கள்.

இன்று நாம், தமிழை வேரறுக்கப் புறப்பட்டிருக்கும் ஆங்கிலக் கனக, விசயர்களை எதிர்த்துக் கிளம்பியிருக்கிறோம். சோ ராமசாமி சாணக்கியர்களும், சங்கரமடத்து மனுதருமப் புரோகிதர்களும் நமக்குப் பில்லி சூனியம் வைக்கத் தொடங்கி விட்டார்கள். நம் சேர சோழ பாண்டிய மாமன்னர்கள் சென்னைப் பட்டினத்துச் சிம்மாசனத்தில் குந்திக் கொண்டு குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நாம் இவர்களின் குளிரைப் போக்கியாக வேண்டும். பில்லி சூனியப் பொய்ம்மைகளை எற்றி உதைத்தாக வேண்டும். தமிழ்க் கல்வி என்னும் சிலையைக் கனக, விசயர்களின் தலையில் ஏற்றியாக வேண்டும்.

பணத்திற்காக ஆங்கிலப் பாறாங்கல்லைச் சுமப்பவர்கள் பணம் கொட்டுமென்றால் தமிழ் என்னும் சிலையையும் தயக்கமின்றிச் சுமப்பார்கள்.

தஞ்சையிலிருந்து மெட்ரிக் பள்ளி தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாக அறிக்கை விட்டுள்ளது.

ஒவ்வொன்றாய் இனி ஆதரவு நிலை எடுப்பது நம் தளரா முயற்சியில் உள்ளது.

நாம் திண்ணியராவோம்.

பின்பு நாம் எண்ணிய எண்ணியாங்கு முடியும்.

தீர்மானம் :-

22-12-99 அன்று பயிற்று மொழிக் கருத்தரங்கில் கலந்து கொண்ட தமிழ் அமைப்புக்கள் நிறைவேற்றிய தீர்மானம் பின்வருமாறு :

"தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் முழுமையாகத் தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும் என்னும் தமிழக அரசின் ஆணையை தமிழ்ப் பயிற்றுமொழி கருத்தரங்கில் கலந்து கொண்ட தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் உறுதியாக ஆதரிக்கின்றன. மாணாக்கர்களின் கல்வி வளர்ச்சிக்கு உகந்த வண்ணமும் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடியும், தமிழரின் நியாயமான உரிமைக்கு காப்பாகவும் உள்ள இந்த ஆணையை எதிர்த்து நீதிமன்றம் செல்லும் சிலரது செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்."

அமைப்புக்கள் :-

பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றம், கோவை.
உலகத் திருக்குறள் மையம்,
பாரதி இலக்கியப் பேரவை,
உலகத்தமிழ் நெறிக் கழகம்,
மாநகர, மாவட்ட பகுத்தறிவாளர் கழகம்,
விஜயா வாசகர் வட்டம்,
அழ. வள்ளியப்பா இலக்கிய மன்றம்,
சேரர் கொற்றம், கோவை.
தமிழ்நாடு இலக்கியப் பேரவை,
கோவை மாவட்ட, மாநகர தமிழாசிரியர் கழகம்,
சமாதான வெண்புறா இயக்கம்,
கோவை தமிழ் மா மன்றம்,
தமிழ்நாடு திராவிடர் கழகம்,
சிங்கை திருவள்ளுவர் பேரவை,
கோவை முத்தமிழ் மன்றம்,
திராவிடர் கழகம்,
தமிழ் அறிவியக்கம்,
தொடக்க, நடுநிலைப் பட்டதாரி ஆசிரியர் சங்கம்,
தமிழ் வயல்.

மேலும் சில . . .

ஆர்ப்பாட்டப் பேரணி

தமிழ்ச்சான்றோர் பேரவையின் வேண்டுகோளை ஏற்று 27.12.99 அன்று கோவையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. தெப்பக்குளம் திடலிலிருந்து புறப்பட்ட பேரணி காந்திபுரம் பெரியார் படிப்பகத்தின் அருகில் முடிவடைந்தது. பேரணியில் ஏறக்குறைய இரண்டாயிரம் பேர் கலந்து கொண்டனர். கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. சி.டி. தண்டபாணி அவர்களின் வேண்டுகோளை ஏற்று கழகத்தோழர்கள் கலந்து கொண்டார்கள். மறுமலர்ச்சி தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, ஆதி தமிழர் பேரவை முதலியவர்களுடன் கோவை, பல்லடம், பொள்ளாச்சி, சூலூர் முதலிய இடங்களிலிருந்து தாய்தமிழ்ப் பள்ளிகள் மற்றும் தமிழ் அமைப்பினர் கலந்து கொண்டனர். பேரணி முடிவில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூர் ஆதீனம் இளையபட்டம் மருதாசல அடிகளார் தலைமை ஏற்றார். திரு. சி.டி. தண்டபாணி, திரு. மு.இராமநாதன் முதலியவர் உரையாற்றினர். தமிழகம் முழுவதிலுமுள்ள தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு அடுத்த ஆண்டுமுதல் அரசு ஏற்பு தருவதுடன் அப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசே ஊதியம் வழங்கவேண்டும் என்று ம.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. அ.மு. மாரியப்பன் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். பேரணிக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்களுள் முதன்மையானவராகிய திரு. கு. இராமகிருட்டிணன், நன்றி கூறினார். ஊர்வலத்தில் ஒங்கி ஒலித்த ஒரு வாசகம் "அம்மா அப்பா கசக்குதா? மம்மி, டாடி இனிக்குதா".

நேர் உரை

திரு.**சிவசாமித்தமிழன்** :

1987ல் கோவை அரசு கலைக் கல்லூரியில் இயல்பின மாணவனாக நான் சேர்ந்தேன். எங்களது ஆங்கிலவழி வகுப்பில் 50 பேர் படித்தோம். தமிழ்வழி வகுப்பில் படித்தவர்கள் 50 பேர். மதிப்பெண் அதிகம் பெற்றவர்களை ஆங்கில வகுப்பிலும் குறைவாகப் பெற்றவர்களை தமிழ் வகுப்பிலும் சேர்த்துக் கொண்டனர். எங்களது ஆங்கில வகுப்பில் படித்த 50 பேர்களில் 45 பேர் தமிழில்தான் தேர்வு எழுதினோம். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமத்தில் படித்து அதிக மதிப்பெண்கள்

பெற்றவர்கள். நகரத்திலுள்ள கான்வென்ட் பள்ளிகளில் படித்தவர்கள் மட்டுமே ஆங்கிலத்தில் தேர்வு எழுதினர். நூலகத்தில் தமிழ் நூல்கள் சில இருந்தன பக்தவத்சலம், சி.சுப்ரமணியம் காலத்தில் வெளிவந்தவை இந்த நூல்கள். இவற்றிலிருந்து நாங்கள் படி எடுத்துக் கொண்டு படித்தோம். தமிழ் மாணவர்களிடம் குறிப்பேடுகளை வாங்குவது எங்களுக்கு அவமானம். நாளடைவில் அவர்களை நண்பர்களாக்கிக் கொண்டோம். அப்புறம் தாராளமாக குறிப்பேடுகளை வாங்கிப் படித்தோம். நூலகத்தில் கிடைத்த நூல்கள் பழைய பாடத்திட்டத்தையொட்டி எழுதப்பட்டவை. எங்களுக்கு வேறு வழியில்லை. அரைகுறையாகத்தான் பதில் எழுதுவோம். எப்படி எழுதுவது என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தது. தேர்வாளர்களுக்கும் இது தெரியும், தேர்ச்சி பெற்றோம். ஆங்கிலத்தில்தான் நாங்கள் தேர்வு எழுதவேண்டுமென்றால் ஒருவர்கூட தேர்ச்சி பெற்றிருக்க முடியாது.

தமிழில் படிக்க மாணவர்கள் விரும்பவில்லை என்பது கடைந்தெடுத்த பொய். தமிழில் தேர்வு எழுத தேர்ச்சி பெற்றவர்கள்தான் எம்.எஸ்.சி வகுப்பிலும் சேருகின்றனர். அங்கும் சமாளித்துக் கொள்கின்றனர். இடைக்காலத்தில் கலைச் சொற்களைக் கற்றுக் கொள்கின்றனர். வேதியியல், உயிரியல் முதலிய அனைத்துப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்பதாகச் சொல்லிக் கொண்டாலும் 95 சதவிகித மாணவர்கள் தமிழில்தான் படிக்கின்றனர்.

அதன்பிறகு சட்டக் கல்லூரியில் படித்தேன். அங்கும் இதே அனுபவம்தான். சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து நான் படித்தேன். கல்லூரியில் A, B, C, D, என்று 4 பிரிவுகள். ஒவ்வொரு பிரிவிலும் 80 மாணவர்கள், ஒவ்வொரு வகுப்பிலும் 75 மாணவர்கள், தமிழில்தான் தேர்வு எழுதுகின்றனர். சட்டநூல்கள் தமிழில் ஒன்றிரண்டுதான் வந்துள்ளன. ஆங்கிலத்திலுள்ள நூல் ஒவ்வொன்றும் விலை ரூபாய் நானூறு; வாங்கிப் படிக்க முடியாது. ஆங்கில நூல்களை வாங்கிப் படித்தாலும் அவை புரிவதில்லை. மூன்றாண்டு படிக்க வேண்டிய சட்டக் கல்வியை பத்தாண்டுகள் வரை பாக்கி வைத்துத் தான் படிக்கிறார்கள்.

அண்மைக் காலத்தில் சேலத்திலிருந்து ஸ்ரீபதிராஜா என்பவர் சட்டகல்விக்கான துணை நூல்களை வெளியிடுகிறார். இவர்தான் எங்களுக்குத் துணைவன். சட்டத்தின் எல்லா துறைகள் பற்றியும் துணைநூல் வெளியிடுகிறார். ஒவ்வொரு நூலும் விலை ரூ. 30.

3 ஆண்டுகளுக்கும் சேர்த்து 20 தாள்கள். எல்லாவற்றுக்கும் துணைநூல்கள் போட்டுள்ளார். இவர்தான் எங்களுக்கு குரு. நீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் இரண்டொரு சொற்கள் மட்டுமே பேசுகிறோம். மற்றவை தமிழில் நீதிபதிக்கு நெருக்கமாகச் சென்று முடித்துக் கொள்கிறோம். சில மாதங்களுக்கு இந்த நிலை தொடரும். அதற்குள் ஆங்கிலத்தில் பேசப் பழகிக் கொள்கிறோம். தப்பும் தவறுமாகப் பேசினாலும் சமாளித்துக் கொள்கிறோம். ஒரு ஜாமீன் மனுவிற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். வழக்கமான ஆங்கிலத்திலுள்ள படிமங்களில் ஆள் பெயரை மட்டும் மாற்றி பயன்படுத்திக் கொள்வதில் சிரமமில்லை. வாங்குகிற பணத்திற்கு உழைக்கிறோம். கற்றுக் கொள்கிறோம். நீதிபதிகளும் தமிழில் பேசுவதைத்தான் விரும்புகிறார்கள். மாவட்ட அளவில் நீதிமன்றங்களில் தமிழ்போதும். உயர்நீதி மன்றத்தில் சாத்தியமில்லை. காரணம் வெளி மாநிலங்களிலிருந்து நீதிபதிகள் வருகிறார்கள். சட்டத்தைப் பொருத்தவரை ஆங்கிலம் தேவையில்லை. ஆங்கிலத்தில் பேசினால் அதிகம் பணம் கிடைக்கிறது. இதுதான் உண்மை.

திரு. **மு.கா. நெடுமாறன்** :-

நான் மெட்ரிக் பள்ளியில் பணியாற்றுகிறேன். நான் மட்டும் அல்லாமல் மெட்ரிக் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் பலரும் அரசு ஆணையை வரவேற்கிறோம். இதனை முன்பே செய்திருக்க வேண்டும் என்பது எங்கள் கருத்து. தமிழ்நாட்டில் இருந்து தமிழே படிக்காமல் பி.ஈ. முதலிய பட்டங்கள் பெற்றுச் செல்வது தமிழை அவமானப்படுத்தும் செயல். கர்நாடகத்திலோ, பிற மாநிலங்களிலோ இப்படிச் செய்ய முடியாது. அரசு ஆணையால் மெட்ரிக் பள்ளி ஆசிரியர்களுக்கு வேலை பறிபோய்விடும் என்பது உண்மை இல்லை. மெட்ரிக் பள்ளிகளில் கூடுதலான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்பாடங்கள் அனைத்தையும் தமிழிலும் கற்பிக்க முடியும். ஆங்கில வழி வகுப்புகளும் இன்னும் பல ஆண்டுகளுக்கு தொடரும். இது குறித்து யாரும் அஞ்ச வேண்டியதில்லை. மெட்ரிக் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களாகிய எங்களுக்கும் தமிழ்ப் பற்று உண்டு. எங்களுக்கான ஊதியத்தை தருபவர்களும் தமிழ்நாட்டு மக்கள்தான். இந்த மக்களை நாங்கள் ஏமாற்ற விரும்பவில்லை.

பள்ளி வளாகத்தினுள் மாணவர்கள் தமிழில் உரையாடக் கூடாது என்று சில மெட்ரிக் பள்ளிகளில் கட்டளை இடுகிறார்கள். இதன் காரணமாக மாணவர்கள் தமிழில் தேர்ச்சி பெறத் தவறிவிடுகிறார்கள். தவறு

மாணவர்களிடத்தில் இல்லை. அறிவியலை ஆங்கிலத்தில் கற்பிக்கும்போது மாணவர்களுக்குப் புரிவதில்லை. ‘தமிழில் சொல்லுங்கள்’ என்று மாணவர்கள் கேட்கின்றனர். இத்தகைய நிலைதான் மெட்ரிக் பள்ளிகளில் நடைபெறுகிறது. தமிழ் வழியாகத் தான் அறிவியலையும் புரிந்து கொள்ள முடியும். மெட்ரிக் பள்ளி தாளாளர்களில் பலர் தமிழுக்கு ஆதரவாளர்களாகத் தான் இருக்கிறார்கள். ஆனால் முதல்வர்களைப் பொருத்தவரை தமிழை அனுமதிப்பது இல்லை. அனுமதித்தால் பள்ளியை நிர்வாகம் செய்ய முடியாது என்பது இவர்கள் கருத்து. முதல்வர்கள் கிறித்துவர்களாகவோ, அல்லது வேற்று மொழியினராகவோ இருந்துவிட்டால் நிலைமை இன்னும் கடுமையாகத் தான் இருக்கும். தமிழுக்கு ஆதரவாக பேசுவதனால் வேலை பறிபோகும் என்றாலும் தமிழ்பற்றுடைய என்னைப் போன்றவர்கள் தமிழுக்காக எதையும் இழக்கவே விரும்புகிறோம்.

திரு. குறிஞ்சி :-

மெட்ரிக் பள்ளிகளில் தமிழ் என்ற சிக்கலை 2 வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. அரசின் அணுகுமுறை பற்றி.
2. தமிழ் அமைப்புகள் குறித்து.

அரசைப் பொருத்தவரை தொடக்கம் முதலே உறுதியான நிலைப்பாடு இல்லை. அரசு தரப்பில் தொடர்ந்து குழப்பங்கள். அமைச்சர்களுக்கிடையில் மாறுபட்ட கருத்துக்கள். அமைச்சர் சற்குணபாண்டியன் மெட்ரிக் பள்ளிகள் பல நடத்துகிறார். ஆங்கிலத்தைத் தொடர்ந்து ஆதரிக்கிறார் அமைச்சர் அன்பழகன். வேலைவாய்ப்பு மிக முக்கியமான பிரச்சனை. தமிழில் கற்றவர்களுக்கு அரசுவேலை வாய்ப்பில் முன்னுரிமை தேவை. சட்டத்திற்கு உட்பட்டே இதைச் செய்ய முடியும். அரசு தரப்பில் முன் முயற்சி தேவை.

அரசு தரப்பில் ஏன் உறுதியாக இல்லை என்பது பற்றி சிலவற்றைச் சொல்லலாம். ஆட்சிக்கு வருவதற்கு முன் இவர்கள் இருந்த நிலை, இன்றுள்ள நிலை என்று ஒப்பிட்டுப் பார்த்தால் பெருத்த மாற்றங்கள் தெரிகின்றன. இவர்களிடம் செல்வம் குவிந்துள்ளது. இதனால் மனநிலையில் மாற்றங்கள்; இவர்களிடம் தமிழ்ப்பற்று உண்டு; ஆனால் உறுதியில்லை. கொள்கையில் உறுதிப்பாடு என்பது பொதுவுடமை இயக்கத்திலும் இல்லை.

தமிழ் வழிக்கல்விக்கு பெரும் எதிரிகளாக இருப்பவர்கள் பெண்கள். பெண்கள் முழு அளவில் ஆங்கிலத்தை, ஆதரிக்கிறார்கள். நெடுங்காலமாக பிற்போக்குவாதிகளாக பெண்களை நாம் வைத்திருந்ததன் விளைவு என்று தான் இதைச் சொல்ல வேண்டும். பெண்களுக்கு உலக வரலாறு தெரிவதில்லை. ஆங்கிலத்தை நேசிப்பது முற்போக்கு என்பது போன்ற தோற்றமிருக்கிறது. பிற்போக்குத்தனத்தின் கூறுகளான உடமைப்பற்று, மதப்பற்று என்பனவெல்லாம் பெண்களிடம் தான் தங்கியுள்ளன. வாழ்க்கையில் பாதுகாப்பு இல்லை என்ற அச்சம் அடிப்படையானது. இதற்காகப் பெண்களை நாம் நொந்து கொள்ளவும் முடியாது. பெண்களின் உளவியல் இப்படித்தான் இருக்கிறது. கம்யூனிஸ்டுகளின் குடும்பங்களிலும் பெண்களை இப்படித்தான் வைத்திருக்கிறார்கள். மக்கள் விரும்புகிறார்கள் என்றுதான் அரசும் சொல்கிறது. இது உண்மை என்றே வைத்துக் கொண்டாலும் இப்படிச் சொல்லி அரசு தன் தார்மீகக் கடமையைப் புறக்கணிக்கிறது. இந்தியாவிலேயே கல்விக்கு அதிகமாக செலவு செய்யும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று. இதற்காக அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது. மக்களின் வரிப்பணத்தை இப்படிச் செலவிடும் அரசு, மக்களுக்கு நல்லது எது என்பதைக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும். முதலாளிகளுக்கு ஆதரவாகத் தான் அரசு எப்போதுமே செயல்படும். ஆனால் மக்கள் நலன் தான் முதன்மை என்று அரசு சனநாயகம் பேசும். சனநாயகம் என்பது மக்கள் நலத்தைப் புறக்கணிப்பதாகவும் இருக்கமுடியாது. ஆகவேதான் அரசு முன்முயற்சி எடுத்திருக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம்.

பெற்றோர்கள் விரும்புகிறார்கள் என்று மெட்ரிக்பள்ளிகள் கூறுகின்றன. நன்கொடை என்ற பெயரால் மெட்ரிக் பள்ளிகள் கொள்ளையடிப்பதை பெற்றோர்கள் விரும்புகிறார்களென்று இவர்கள் சொல்லமுடியுமா. பெற்றோர்கள் விரும்புகிறார்கள் என்பது போலித்தனமான பொய்யானவாதம். உச்ச அளவில் மதிப்பெண்கள் பெறுவதென்பது நல்ல கல்விக் கொள்கையாகவும் இருக்க முடியாது. கல்வித்திட்டம் பற்றி நாம் நிறையப் பேசவேண்டும். சமூக அடித்தளத்திலிருந்து எல்லாவற்றையும் தோண்டிப் பார்க்க வேண்டும். சமூகத்தினுடைய ஒட்டுமொத்தமான மாற்றத்தோடு கல்வித் திட்டமானது உறவுடையது. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகப்பற்று முதலியவற்றை மெட்ரிக் பள்ளிகளிடம் எதிர்பார்க்க முடியாது. மெட்ரிக் பள்ளிகளின் கல்விக்கொள்கை என்பது இன்றைய மூர்க்கத்தனமான முதலாளியப் போக்கிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. இப்பள்ளிகளிடம் விடுதலை உணர்வு என்பதைக் கற்றுக்

கொள்ள முடியாது. மெட்ரிக் பள்ளிகள் தரும் அறிவியல், கணிதம், ஆங்கிலம் ஆகியவை உலக முதலாளியத்தை வளர்க்கும் போக்கு; மெக்காலே கல்விமுறையை இன்னும் நுட்பமாக இவர்கள் கற்பிக்கிறார்கள்.

தமிழ் அமைப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கின்றன. தமிழ்ச் சான்றோர் பேரவை இவற்றை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பேரவை இன்னும் கூடுதலாக அரசுக்கு அழுத்தம் தரவேண்டும். பேரவைக்குள் சனநாயகப்போக்கு இல்லை என்பது ஒருகுறை. வெளியே தமிழுக்கு ஆதரவான சக்திகள் அதிகமுள்ளன. தமிழ்ச்சான்றோர் பேரவை கூட நகரம் சார்ந்ததாகத் தானிருக்கிறது. ஈரோடு, கோவை போன்ற நகரங்களில் பேரவை இல்லை. எல்லாத் தமிழ் அமைப்புக்களையும் பேரவை ஒன்று திரட்டுமா, சனநாயகப் போக்கை கடைபிடிக்குமா என்றெல்லாம் கேள்வி எழுப்ப வேண்டியிருக்கிறது. பேரவைக்குள் பெரியாரியப் போக்கு இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது. மார்க்சீய சக்திகள் பேரவைக்குள் அதிகமில்லை. பெரியாரியமும் மார்க்சியமும் இணைந்தாலொழிய தாய்மொழிச் சிக்கல் குறித்துச் சரியான பார்வையைப் பெற முடியாது. மார்க்சியரிடம் பெரியாரியம் பற்றிய அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் பெரியாரியக்கத்தினரிடம் இத்தகைய மாற்றம் ஏற்படவில்லை. இப்படியெல்லாம் சிக்கல்கள் இருக்கின்றன.

உலகமயமாதலை ஆதரித்துத்தான் கலைஞர் பேசுகிறார். எதிர்காலத்தில் நிகழவிருக்கும் ஆபத்து குறித்து கலைஞர் கவலைப்படவில்லை. ஆகவே கலைஞரால் ஆங்கிலத்தை ஒதுக்க முடியாது. தவிர தி.மு.க. என்பது ஒரு இறுக்கமான நிறுவனம் ஆகிவிட்டது. உள்கட்சி சனநாயகத்தை அனுமதிப்பதில்லை. சனநாயகத்தை வெளியேற்றிய நிலையில் ஒரு சிறு குழு அல்லது தலைவர் ஒருவரே எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியும் இம்முறையில் நிறுவனமாகிறது. சமூக விடுதலை பற்றிய கல்வி கட்சிக்குள் தரப்படுவதில்லை. உள்ளே வருபவருக்கு பதவிதான் முக்கியம். பதவியைக் காட்டி எவரையும் அடக்கி வைக்க முடியும். சரணாகதி தவிர பதவி, செல்வாக்கு, பணம் முதலியவற்றைப் பெற வேறு வழியில்லை. நிறுவனங்கள் இல்லாமல் முடியாது. ஆனால் மையத்தில் அதிகாரத்தைக் குவிக்கும் நிறுவனம் விடுதலைக்கு வழிவிடாது. சமூக விடுதலை என்பதோடு, இணைத்துத் தான் ஒரு புதிய கல்விக் கொள்கை பற்றிப் பேசமுடியும். தமிழுக்கும் அப்பொழுதுதான் விடுதலை கிடைக்கும்.

திரு. நாஞ்சில் நாடன் :-

5 ஆம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களும் தமிழிலேயே வந்துவிட்டாலும் பெரிதாக இங்கு என்ன ஏற்பட்டுவிடும். திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம் என்பனவற்றைக் கற்றுத் தருவதில் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடும். பாடநூல்களை எழுதும் புலவர்கள் யார்யார் என்பதைப் பார்த்தால் நமக்கு உண்மை தெரியும். கழகத் தலைவர்களைப் புகழ்ந்து எழுதவேண்டும். தலைவர்களின் கட்டுரைகளைப் பாடமாக வைக்க வேண்டும். மாணவர்களுக்கு சோர்வு தரும் முறையில்தான் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இதே நிலைதான் கல்லூரிக் கல்வி வரை தொடர்கிறது. தமிழின் உயிர்ச்சக்தியை பிடுங்கியெறிந்து விட்டு தமிழ் வழியாகக் கற்பித்து என்ன பயன்?

மெட்ரிக் பள்ளிகளில் தமிழ்

கட்டுரை

திரு. கோ. ஆறுமுகம் :-

இன்று மழலையர் பள்ளியெல்லாம் தமிழ் விதை குழிகளாக இல்லாமல், புதை குழிகளாக இருக்கும் அவலத்தைப் பார்க்கும்போது தமிழில் தவறி ஒருசொல் சொன்னாலும் தமிழ் குழந்தையிடம் தண்டக்காசு வாங்கும் பள்ளிகள் தமிழ் மாநிலத்தில் கொடிகட்டி வளரும்போது முதற்கண் பேச வேண்டியது தமிழன்றோ? என்ற முனைவர் வ.சுப. மாணிக்கனாரின் கருத்து சிந்திக்கத்தக்கது.

மெட்ரிப் பள்ளிகளின் நிலைமை :

இன்றைய மெட்ரிக் பள்ளிகள் மழலையர் பள்ளிமுதல் மேல்நிலைப்பள்ளிவரை அனைத்துப் பாடங்களும் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டுள்ளன. தாய்மொழிக்குப் பதிலாக இந்தி, பிரெஞ்சு மொழிகள் படிக்க வாய்ப்பும் வசதியும் உள்ளன. எந்த வகையிலும் தமிழ் மட்டும் நுழையாமல், தடைசெய்யும் போக்கைக் கவனமாகத் திட்டமிட்டுள்ளனர்.

பள்ளிகளின் தாளாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் மூவரும் இணைந்து ஆங்கில மொழியின் மேலாண்மையில் சிக்கி, தாய்மொழியை பின்தள்ளி, சிந்தனைத் திறனை அழித்து, மேலை நாடுகளில்

அனைவர்க்கும் வேலை கிட்டும் என்ற நிலையில் தீவிரமாகச் செயல்படுகின்றனர்.

தாய்மொழி, தாய்மொழிச் சிந்தனை வேண்டியதில்லை. எனக்குத் தெரிந்த தமிழே போதும் என்ற சிந்தனைப் போக்கு மூவரிடம் செயல்படுகிறது.

மூவரின் அதிகாரத்தில் மாணவர்கள் வீட்டிலும், பள்ளியிலும் பாடங்களைக் கரைத்துக் குடித்தலும் வாந்தியெடுப்பதிலும் திறனுடையவர்களாக உற்பத்தி செய்யப்படுகிறார்கள். ஆங்கில மொழிக் கல்வித்திட்டம் தமிழ் மொழிக் கல்வித் திட்டத்திலிருந்து மாறுபட்டு, மொழியைக் கற்றுக்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. மாணவர்களை கல்வியில் ஈடுபடுத்தும் முறையில் பாடங்களும், பள்ளிச்சூழலும், நிர்வாகமும், அமைந்துள்ளன. மொழியைக் கற்றல், இலக்கியம் கற்றல் என்பது வேறுபடுத்தப்பட்டுள்ளது. தேர்வு முறைகள் மாறுபட்டுள்ளன. மொழிப்பாடத்தில் உரைநடைப் பகுதி குறைவாகவும் பயிற்சிப் பகுதி அதிகமாகவும் தரப்பட்டுள்ளது. வகுப்பறையிலும் வீட்டிலும், அவன் உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள், இளைஞிகளாகிய ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்தில் கூடுதலாக உழைத்து (விடுமுறைகள் மறுக்கப்படுகின்றன) மாணவனாகத் தயார் செய்கின்றனர். பள்ளிகளுக்கு இடையில் கல்வியிலும், தரத்திலும், கூடுதலாக, உயரமாகக் கட்டிடங்களில் கட்டுவதிலும் கடும்போட்டி நிலவுகிறது.

மாணவர்களிடமிருந்து நுழைவுக்கட்டணம், ஆண்டுக்கு மும்முறைக் கட்டணங்கள், நோட்டுகளுக்கு, புத்தகங்களுக்கு மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கென்று பணம் முறைகேடான வகையில் நிர்பந்திக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு கல்விநிலையங்கள் நல்ல வணிக நிலையங்களாக துரிதமாகச் செயல்படுகின்றன. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு பதினொன்றாம் வகுப்பிலிருந்தும் பாடங்கள் நடத்துகின்றனர். பத்தாம், பன்னிரண்டாம் வகுப்புகளில் நிர்வாகத்திற்கு இணங்காத, ஐம்பது சதவீதத்திற்குக் குறைவாக மதிப்பெண்பெறும் மாணவர்கள் காலாண்டுத் தேர்விற்குப்பின், பள்ளியில் பெயரளவில் படித்துக் கொண்டுத் தனித் தேர்வர்களாக தள்ளிவைக்கப்படுகிறார்கள். பள்ளியில் சேர்க்கும்பொழுதே

கூடுதலான மதிப்பெண் பெற்றவர்களைத் தேர்வு செய்வதும், இறுதித் தேர்வு எழுதும்பொழுது சிறிது மதிப்பெண் குறைந்தவர்களை வெளியேற்றி விட்டு, எங்கள் பள்ளி பத்துப் பதினைந்து ஆண்டுகளாக நூற்றுக்கு நூறு பெற்றுள்ளது என்று பறைசாற்றி பெயர்கொள்ளுதல் நிலைபெற்று வருகிறது.

மூவரும் இணைந்து மாணவனுக்குரிய அன்பு, பண்பு, மனிதாபிமானம், நல்லுறவு போன்றவற்றை அழித்து, அவனை வேறொரு உள்ளடக்கத்தில் பயிற்றுவிக்கின்றனர். அதனால் சமூக மாணவனாக வளரவேண்டியவன் 'தான்' என்ற அகந்தை பெற்று வளருகிறான்.

நல்ல சமூகம் உருவாக, இவர்கள் பயன்படுவது அரிது. இவர்கள் அதிகாரம் படைத்தவர்களாக, ஊழல்மிக்கவர்களாக வளர்வதற்கான சூழல் மிகுந்துள்ளது. மனிதர்கள், பறவைகள், விலங்குகள், இயற்கை மற்றும் நாட்டின் மீது அன்பைக் காட்ட இவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில்லை. கல்வி நிலையங்கள் மாணவர்களிடம் பணத்தைச் சுரண்டி முதலாளிகளை உருவாக்குகின்றன. நடத்துகின்ற ஆசிரியர்களுக்கும் பணம் முதன்மையான நோக்கமாக உள்ளது. பெற்றோர்களுக்கு நமது குழந்தைகள் டாலர்களாக, பவுண்ட்ஸ்களாகத் தருவார்கள் என்ற பேராசை கூடுதலாக உள்ளது. மூவரைக் காட்டிலும் பெரிய பெரிய ஆசைகள் உடையவனாக மாணவன் வளர்க்கப்படுகிறான். மெட்ரிக் பள்ளிகளில் குறைந்த மாணவர்கள் படிக்கும் தமிழ்ப் பாடநூல் பக்கங்களிலும், தரத்திலும் மிகக் குறைவு. (அரசு பாடமே தரமில்லை).

குறைந்த மூலதனம் கொண்டு நிறையப் பொருள் தேடலும், அதைக் குறையாமல் பார்த்துக் கொள்ளவும், மெட்ரிக் பள்ளிகளுக்கு ஆங்கிலம் தேவையாக உள்ளது.

கோவை மாவட்டத்தில் தமிழர்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகள் மிகமிகக் குறைவு. ராஜஸ்தானிகள், குஜராத்திகள், தெலுங்கர்கள், கிறிஸ்துவ நிலையங்கள் நடத்துகின்ற பள்ளிகளே அதிகம்.

தமிழர்கள் நடத்தும் பள்ளிகளே தமிழை அழிக்கும் போக்கில் செயல்படும்பொழுது, தமிழர் அல்லாதவர்கள் தமிழை ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். படிக்கும் மாணவர்கள் தமிழர்களாக இருந்தாலும், அவர்களையும் இவர்கள் பொய்யான கற்பனையில் தனக்கு ஆதரவாக இணைத்துக் கொண்டு, விடாது மகுடி வாசிக்கின்றனர்.

நடைமுறைக்கல்வி :-

தனியார் பள்ளிகளில் 'ஏ' வகுப்பு மட்டுமே ஆங்கிலத்தில் இருந்தது. இன்று ஐந்து பிரிவுகள் இருந்தால் ஒரு வகுப்பு மட்டுமே தமிழில் உள்ள நிலை ஏற்பட்டுள்ளது. ஒரே வளாகத்தில் காலையில் அங்கீகாரமான பள்ளி, மாலையில் இவர்களுக்கு உகந்த பள்ளி நடைபெறுகிறது.

அரசு சம்பளம் அனைத்து ஆசிரியர்களும் அன்று பெற்ற கல்வி, பயிற்சியுடன் தேங்கிய நிலையில் உள்ளனர். மறுபயிற்சி என்பது பெயரளவில் கற்றுத் தரப்படுகிறது. இடைநிலை ஆசிரியர்கள் ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை அனைத்துப் பாடங்களையும் கற்றுத் தருகின்றனர். இன்றைய அறிவியல் / கணக்கு ஆங்கிலப் பாடங்களில் இவர்களுக்குத் தேர்ச்சியும், தெரிந்து கொள்ளவேண்டிய அக்கறையும் குறைவு. இவர்களின் புலமையில் மாணவர்கள் புலமை பெறுவது கடினம். ஆசிரியர்களின் திறமையற்ற போக்குகளும், மாலை நேரத்தனிப்பயிற்சியும் கல்விக்குத் தீமையான போக்குகளாக வளர்ந்துவிட்டன.

இந்த இடைவெளியை மெட்ரிக் பள்ளிகள் இன்று மிகத் துரிதமாகப் பயன்படுத்தி உயர்ந்து வருகின்றன. 1967–ல் மெட்ரிக் பள்ளிகள் தொடங்க அனுமதி அளித்ததின் காரணமாக, இன்று எங்கும் மெட்ரிக் பள்ளிகள் தோன்றியுள்ளதைக் காணலாம். பெரும்பாலான பள்ளிகள் வீடுகளிலும், நீண்ட ஒரே அறையிலும் செயல்படுகின்றன.

முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை அனைத்துப் பாடங்களும் தாய்மொழிக் கல்வியில்தான் கற்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. மழலையர் பள்ளிகள் பற்றி குறிப்பு எதுவும் காணப்படவில்லை. ஐந்தாம் வகுப்பு வரை பெயரளவில் தமிழை வைத்துக் கொண்டு ஆங்கிலம் சொல்லித் தர வாய்ப்புள்ளது. ஐந்தாம் வகுப்பு வரை படிக்காமலே, ஓர் ஓய்வுபெற்ற இடை ஆசிரியரிடம் தனிப்படிப்புக் கற்றதாக சான்றளித்தால் ஆறாம் வகுப்பில் சேர்த்துக் கொள்ள தற்போது ஆணை உள்ளது. இதுபற்றியெல்லாம் அரசின் முடிவுகள் தெளிவு செய்யப்பட வேண்டும்.

ஆங்கிலம் இருக்கும்வரை தாய்மொழியை முதன்மைப்படுத்துவது எளிதான செயல் அல்ல. விருப்பப் பாடமாக பிறமொழிகள் படிக்க வாய்ப்பும் வசதியும் அளித்தல் வேண்டும். இன்றைய மொழிக் கலப்பில் ஒரு மொழி செல்வாக்குப் பெற்று ஓங்கிட, மற்றொரு மொழி உரிமை இழந்து அழிதலும் வெளிப்படையாகத் தெரிகிறது.

தாய்மொழிக்கல்வி கட்டாயம் என்பது மகிழ்ச்சியளிக்கக்கூடியது. ஆனால் இந்தப் பாடங்கள் மாணவனுக்கு உகந்ததாக இல்லை. அறிஞர்களைக் கொண்டுத் தரமான புத்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும். வல்லுநர்கள் குழு அமைக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் இக்குழுவில் இருக்கக்கூடாது.

தமிழாசிரியர்கள் சங்க இலக்கியம் கற்றுக் கொண்டதன் விளைவாக, அதன் சிறப்பில் திளைத்து பெருமையில் வாழ்ந்து, தமிழ்மொழி உலகளாவியது என்ற தன் முனைப்பில், புதியவற்றைக் கற்க மறந்து, பழமையே பேசி, புதுக்கவிதையை மறுத்து, மரபிலும் தேய்ந்து தமிழைத் தாழ்த்திய பெருமை தமிழாசிரியர்களைச் சாரும். தமிழ் உயர்வாக இருந்த காலத்தில் பெருமையிலும், மகிழ்ச்சியிலும் திளைத்தவர்கள், தாழ்ந்திருக்கும்போது கண்மூடியும், மௌனம் சாதிப்பதும் இவர்கள் தமிழைக் காப்பாற்ற மாட்டார்கள் என்பது வெளிப்படை.

மொழியின் வளம் பற்றி நாம் அக்கறை கொள்கிறோம். சமூகத்தில் கல்வி கற்க வேண்டிய உயர வேண்டிய விளிம்பு நிலையிலுள்ளவர்களுக்கான கல்வி அவசியம். அவர்களை அன்பு செலுத்தவும், மதிக்கவும் உரிய இக்கல்வியில் இடமில்லை.

"நாங்கள் சேற்றில் கால்வைக்காவிட்டால்
நீங்கள் சோற்றில் கைவைக்க முடியாது"

என்ற வரிகள் விளிம்புநிலை மக்களை உயர்த்தவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

தமிழ்மொழியின் ஆழமும், பழமையின் மரபுத் தடமும் வலுவாக உள்ளது. அதன் பிறப்பு உயிர்த்தெழுந்து பாயும் சக்தியை யாராலும் தடுக்க முடியாது. இன்று கல்வியாளர்களும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் தனது வாழ்வின் பெருமை, பதவிகாரணமாக தமிழை வீழ்த்த நினைக்கின்றனர். இவர்களை தமிழ் வீழ்த்தும் நாள், வெகு தொலைவில்லை. அதற்கான வேர்கள் தமிழ் மண்ணில் சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் தடம் பதித்துள்ளன.

இதைத்தான் பாரதியும் உறுதி செய்கிறார்.

'தமிழ்நாட்டிலே தமிழ் சிறந்திடுக'
'தமிழ்நாட்டில் தமிழ்மொழி
தலைமை பெற்றுத் தழைத்திடுக.'

தினமணி - கடிதங்கள்

சாதனைத் தமிழர்கள்

தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ முடியும். இதைத் தலைகீழாக மாற்றியுள்ளார் டாக்டர் பி.ராமமூர்த்தி (16.12.99). ஐந்தாம் வகுப்பு வரை எல்லாக் குழந்தைகளும் தமிழ் மொழியிலேயே கல்வி கற்றால், எந்தத் துறையிலும் முன்னேற்றம் இல்லாமல், தமிழக ஏழை மக்கள் இன்னும் ஏழைகளாகி விடுவார்கள் என்று சாதாரண மக்கள்போல அறிஞர்களும் கருதக் கூடாது. ஆதாரக் கல்வியைத்தான் தமிழில் கற்கச் சொல்கிறது தமிழக அரசு. உயர்நிலைக் கல்வியை ஆங்கிலத்திலே கற்கத் தடையில்லையே.

சர்.சி.வி. ராமன், சந்திரசேகர், கணிதமேதை ராமானுஜம், ராஜாஜி, சீனிவாச சாஸ்திரி, சத்தியமூர்த்தி, பாரதியார் என்று அந்தக் காலத்தில் மட்டுமல்ல இன்றும் 'பாரத ரத்னா' அப்துல் கலாம் வரை, மாபெரும் சாதனைத் தமிழர்கள் ஆதாரக் கல்வியைத் தமிழிலேயே பயின்று, மேல்நிலைக் கல்வியைத்தான் ஆங்கிலத்தில் படித்தார்கள். நர்சரிப் பள்ளி முதல் ஆங்கிலத்திலேயே படித்த தமிழர்கள் யாராவது இந்த அளவுக்குச் சாதித்துள்ளனரா?

சித. வைரவன்
சென்னை – 14.

விவேகமான செயல்

நம் தமிழ்நாட்டின் பண்பாடு, கலாசாரம் மேன்மேலும் சீரழிய நாம் துணை போவது முறையாகுமா? தமிழ்வழிக் கல்வி ஆணையைத் தமிழகத்தில் உள்ள அனைத்துவகைப் பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசினை வலியுறுத்துவது ஒன்றே விவேகமான செயல்.

ஆங்கிலேயன் விடைபெற்றுவிட்டான். ஆனால் ஆங்கில மோகம் நம்மை அடிமையாக்கிவிட்டது. இதில் இருந்து விடுதலை பெற தமிழக அரசின் சட்டத்தை வரவேற்று, அதனை மேலும் செம்மைப்படுத்த வழி சொல்வதே விவேகமான செயல் ஆகும்.

கா.இரா. குப்புதாசு,
மாநிலத் துணைத் தலைவர், தமிழக ஆசிரியர் கூட்டணி.

தமிழனாக வாழ வேண்டும்

நான் ஒரு விளம்பரம் பார்த்தேன். 'Learn Tamil and Be a literate in Tamlinadu' என்றிருந்தது. தமிழ் படிக்கத் தெரியாதான் இங்கு 'கல்லாதான்' தானே!

இன்று தமிழ் தெரியாதவர்கள் தான் மேட்டுக்குடிகளாக இருக்கிறார்கள். அதைப் பெருமையாக வேறு கூறிக் கொள்வதுதான் கேவலம். தமிழன் வாழ்வதால் மட்டும் தமிழ் வளராது. அவன் தமிழனாக இருக்க முயல வேண்டும்.

சண்முகம், கொடுமுடி

மேதைகளுக்கும் சறுக்கும்

தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழும் என்கிறார் மருத்துவ மேதை. மொரீசியஸ் தீவில் தமிழன் வாழ்கிறான். அங்கே தமிழ் வாழ்கிறதா? தென்னாப்பிரிக்காவில் தமிழன் வாழ்கிறான். அங்கே தமிழ் வாழ்கிறதா? அமெரிக்கா, கனடா, லண்டனில் தமிழன் வாழ்கிறான். அங்கெல்லாம் தமிழ் வாழ்கிறதா?

எங்கே தமிழ் பயிற்றுமொழியாகவும் ஆட்சிமொழியாகவும் இருக்கிறதோ அங்கேதான் தமிழ் வாழும்.

யானைக்கு மட்டுமா அடி சறுக்கும்? மேதைகளுக்கும் சறுக்கும்!

'முகம்' மாமணி, சென்னை – 78

கட்டாய ஆங்கிலப் பாடம்

தாய்மொழிவழிக் கல்வி சிறப்புடையது என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால் இன்றையத் தாராளமய உலகில், ஆங்கிலத்தின் தேவையை ஒதுக்க முடியாது. ஆறாவது வகுப்பிலிருந்து ஆங்கிலவழிக் கல்வி அமையலாம் என்பது அரசின் கொள்கையென்றால், நடைமுறையில் மாணவர்களுக்கு மிகுந்த சிரமத்தை அளிக்கும்.

எனவே ஐந்தாம் வகுப்பு முடிய எல்லா வகுப்புகளிலும் ஆங்கிலம் கட்டாயப்பாடமாகச் சொல்லித்தரப்பட வேண்டும். அரசுப் பள்ளிகள் ஒழுங்காக இருந்தால், எவரும் தனியார் பள்ளிக்குப் பணம் செலவு செய்து செல்லமாட்டார்கள். எனவே, தமிழ்மீது அக்கறை இருப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்நாடு அரசு, தன் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளைக் கண்டிப்போடும் திறமையோடும் செயல்படச் செய்தால், தாய்மொழிக் கல்வி

விழுமியது என்ற உறுதி மக்களுக்குப் புலப்படும். அவ்வாறன்றி, தனியார் பள்ளிகளை வற்புறுத்துவது, மக்களின் அச்சத்தையும் போக்காது, வெறுப்பையே சம்பாதிக்கும்.

தனியார் பள்ளிகளின் நிர்வாகக் குறைகளைக் காரணம் காட்டுவது ஏற்புடையதல்ல. அது வேறு. அதற்கான நடவடிக்கையை இதுகாறும் எடுக்காமலிருந்தது அரசின் தவறே.

என்.ஆர்.ஸத்யமூர்த்தி, கடலூர் – 1

கடுஞ்சொற் களஞ்சியமா தமிழ்மொழி ?

தலைமை நீதிபதி கே.ஜி. பாலகிருஷ்ணன் நீதிபதிகளுக்குச் சொன்ன அறிவுரையைப் (8.12.99) படித்து அதிர்ச்சியுற்றேன்.

முடிந்தவரை ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்றும் தமிழில் பேசும்பொழுது சில நேரங்களில் கடும் சொல்லைப் பயன்படுத்த நேரிடும் என்றும் அவர் கூறியிருக்கும் சொற்கள் – ஆங்கிலத்தில்தான் பேசப்பட்டிருக்க வேண்டும் – பல்லாயிரம் தமிழ் நெஞ்சங்களில் ஈயத்தை உருக்கிக் காய்ச்சி ஊற்றியிருக்கின்றன.

மாநில மொழியான தமிழ் அனைத்து நிலைகளிலும் கருவி மொழியாவதற்குரிய முயற்சியில் நாடும் மக்களும் ஈடுபட்டிருக்கிற நேரத்தில் பொருத்தமற்ற கூற்றாக இக்கருத்துரை வெளிவந்திருக்கிறது.

ஆங்கிலம் காதுகுளிர வரும் பனி மழை போலவும், தமிழ் ஏதோ சம்மட்டி ஓசை போலவும் தலைமை நீதிபதியின் பேச்சில் தொனிக்கிறது. தீமை என்று சொல்லவும் கூசிய சங்கப் புலவன் 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று தீமையை 'நல்லது அல்லாதது' என்று மென்மையிலும் மென்மையாகச் சொல்லியது தமிழில்தான். கொலைச் செயலைக்கூடச் சொல்லத் தயங்கிய சேக்கிழார், முத்தநாதனும் அதிசூரனும் 'கருதியதை முடித்தார்கள்' என்று சொல்லி ஆறுதல் காண்பார். கருங்கல் நெஞ்சமும் சசிந்துருகத் தேவாரமும் திருவாசகமும் திவ்யப் பிரபந்தமும் பிறந்த மொழியையா கடுமொழி என்கிறார் நீதிபதி?

'தெள்ளுற்ற தமிழமுது' என்று பாரதியாரும் 'தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள் தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை' என்று பாவேந்தரும் கொண்டாடிய மொழியா கடுஞ்சொற் களஞ்சியமாகி விட்டது? 'மக்கள் மொழியில் நீதிமன்றத்தில் பேசுங்கள்' என்று அறிவுறுத்த வேண்டிய தலைமை நீதிபதி தடம் புரளுவது நியாயமா? நாளைக்குத் தமிழ்வழிக்

கல்விக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு வந்தால் தலைமை நீதிபதி தாய்மொழியின் பக்கம் நிற்பார் என்று நம்பமுடியுமா?

அன்னிய மொழியைக் கட்டிக்கொண்டு அழுவதும் அன்னிய ஆட்சியைக் கொலுவேற்ற நினைப்பதும் ஒன்றுதான்.

தினமணி
22.12.99

சிற்பி பாலசுப்பிரமணியம்,
பொள்ளாச்சி.

செயலே முக்கியம் :

'பண்பாட்டுத் துறையில் வேண்டாம் அரசியல்' – தமிழவனின் கட்டுரை (11.12.99) படித்தேன்.

வெற்றுக் கோஷங்களால் 'தமிழ் வாழ்க' என்று முழங்கி விட்டால் மட்டும் போதாது. உண்மையிலேயே நம் மொழி வளரத் தேவையான அடிப்படைச் செயல்களில் இறங்கியாக வேண்டும். மலையாள, கன்னட மொழி அறிஞர்கள் ஓசையில்லாமல் செய்யும் பணிக்கு அம்மாநில அரசுகளும் உதவி புரிகின்றன. கட்டுரையாளர் சொன்னமாதிரி, நம் மொழியில் வந்து கொண்டிருக்கும் சிறந்த நூல்கள் பற்றியும், எழுத்தாளர்கள் பற்றியும் ஆங்கிலம் மற்றும் இந்தியில் சொல்லத்தான் வேண்டும். அரசியல் கலக்காமல் அரசு இதைச் செயல்படுத்த வேண்டும்.

தினமணி
24-12-99

எம். ஞானசேகரன்,
சென்னை – 63.

தளர்கிறது தமிழ் வளர்ச்சி

தமிழ் இலக்கியம், திராவிட இலக்கியத்தின் தாய். ஆனால் திராவிட இலக்கிய மொழிகளான மலையாளம், கன்னடம் போன்றவை அனைத்திந்திய அளவில் பெருமையுடன் பேசப்படுகின்றன. தமிழ் மட்டும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ் இலக்கியத்தை, உலகத்திற்கு எடுத்துச் செல்லும் மொழி ஊடகமான ஆங்கிலம் மற்றும் இந்தியில் மொழிபெயர்க்க வேண்டும். ஆனால் நம் தமிழகத்தில் அரசியல்வாதிகளின் சமய சந்தர்ப்ப அறிக்கைகளால் தமிழின் வளர்ச்சி நாள்தோறும் தளர்கிறது. மொழியியல் அறிஞர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். ஆங்கிலம் இருந்தால் தமிழ்மொழி அழியும் என்பது வீணான கற்பனை.

தினமணி
24-12-99

மா.ந. சொக்கலிக்கம்,
வங்கனூர்.

எந்த அரசியலை ஒதுக்குவது?

வரலாற்று நோக்கில் பார்த்தால் பண்பாடும் அரசியலும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடிக்கு நெருங்கிய உறவைக் கொண்டுள்ளன. எந்த அரசியல் முன்னுக்கு வருகிறதோ அந்த அரசியலின் பண்பாட்டுக் கூறுகள் பரவலாக்கப்படும். இதற்கெல்லாம் மாற்று வேண்டும் என்பதுதான் சமூக வரலாற்றுத் தேவை. அதை நிறைவு செய்ய அறிவியல்பூர்வமான அணுகுமுறையை அனைத்து நிலைகளிலும் வளர்த்தெடுக்க வேண்டும். எனவே, பொதுவாக அரசியலை ஒதுக்குவதல்ல பிரச்சினை. எந்த அரசியலை வளர்ப்பது என்பதே மையமான விவாதப் பொருளாக இருக்கவேண்டும்.

தினமணி
24-12-99

சு. மாதவன்,
தஞ்சாவூர்-5

நீங்க வேண்டிய தடை

தமிழகப் பண்பாட்டுத் துறையிலிருந்து விலக வேண்டியது இனத்துவேஷம், மொழித் துவேஷம், இலக்கியத் துவேஷம், இந்திய தேசியத் துவேஷம் ஆகியவைதான்.

சமஸ்கிருத, ஹிந்தி மொழிகளை மலையாளிகள், கன்னடர்கள் எதிர்ப்பதில்லை. தங்கள் பண்பாடு தனித்தன்மை வாய்ந்தது என்று பறைசாற்றுவதும் இல்லை.

பாரதீயப் பண்பாடு என்பது 'தமிழர் பண்பாடே' என்று நிறுவ தமிழகத்தில் புலவர்கள் இல்லை. ஒருசிலர் இருந்தால், அவர்கள் இனத் துவேஷம் நிறைந்தவர்களாக இருந்ததால் – இருப்பதால் அவர்கள் கூற்றைப் பிறமொழியாளர் காது கொடுத்துக் கேட்பதில்லை – ஆய்வதில்லை.

இதுதான் 20-வது நூற்றாண்டு தமிழ் மொழியின் பெருமைக்கு, இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்பட்ட பெருந்தடை. இத்தடை நீங்குமானால் தமிழ் மொழி "செம்மொழி" மட்டுமல்ல, மொழிகளிலே 'முதல் மொழி' என்ற தகுதியையும் பெறும் – பெற முடியும்.

தினமணி
24-12-99

வெ. பாலன்,
சென்னை-20.

அடுத்த நூற்றாண்டிலாவது . . .

ஒரு காலத்தில் தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக் கழகத்திலிருந்தும் தமிழியல், Journal of Tamil Studies, Tamil Culture,

தமிழாய்வு என்றவாறு ஏராளமான ஆய்விதழ்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவையெல்லாம் ஏன் நின்று போயின? தமிழாய்வு நிறைவடைந்து விட்டதா?

ஆனால், தனிமனிதர்கள் பலர் தற்காலத் தமிழின் ஆற்றலை உலகுக்கு அடையாளம் காட்டிக் கொண்டு தான் உள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் எழுத்தாளர் கு. சின்னப்பாரதி. அவர் பல ஆண்டுகளாக Indian Literature and Aesthetics என்ற ஆங்கிலக் காலாண்டிதழை நடத்தி வருகிறார். இவ்விதழ் இந்திய மொழிகளின் இலக்கியங்களுக்குள் ஊடாடும் பொதுத் தன்மைகளை – குறிப்பாக, தமிழின் படைப்பாற்றல் திறனை வெளி உலகுக்கு அறிவித்து வருகிறது.

இந்நிலையில், 21–ம் நூற்றாண்டிலாவது தமிழின் பன்முகத் தன்மையை வளர்த்தெடுக்கவும், வார்த்துக் காட்டவும் தமிழர்கள் தயாராக வேண்டும்.

தினமணி
24–12–99

ஏழைதாசன்,
தஞ்சாவூர்.

முன்னேற்றத்துக்கு வழி :–

தமிழ் வழிக்கல்வி தலையங்கம் 30–11–99 படித்தேன். இன்றைய நிலையில் உலகில் உள்ள 20 சதவீத மக்கள் தொகையினைக் கொண்ட நாடுகள், 80 சதவீத மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளை விட அறிவியல் – தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கி, பலவிதத்திலும் மேம்பட்டு விளங்குவதற்குக் காரணம் தாய்மொழி வழிக்கல்வியே என்பதை அறிஞர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

பொது மொழி எதுவாக இருப்பினும் இந்திய மாநில அரசுகள் அவரவர் மாநில மொழிகளை இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப வளர்த்துத் தாய்மொழியில் கல்வி தரவேண்டும்.

மத்திய அரசும் மாநிலத்தின் தாய்மொழி வழிக் கல்வியை ஆதரித்து இந்தியா முழுமையையும் பொதுக்கல்வி முறையினைக் கொண்டுவந்து இந்திய ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்.

தினமணி
14–12–99

ம. இளந்திரையன்,
பூந்தமல்லி.

உடனடிச் சட்டம் :

தமிழ்ப் பயிற்று மொழி ஆணையைச் சட்டப்பேரவையில் அரசு உடனே சட்டமாக இயற்ற வேண்டும்.

இவ்வாணை சட்டமாக இயற்றப்பட்டால்தான், அரசின் முயற்சி முழுமை பெறும்; இல்லாவிட்டால், "அரைக்கிணறு தாண்டியவன் கதி" யே இந்த ஆணைக்கும் ஏற்படும்!

தினமணி
14-12-99

தி.க.சி.,
நெல்லை - 6.

அரசுப் பள்ளிகளின் தரம் :

இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடிய திராவிடக் கட்சிகள் ஆங்கில ஆதிக்கத்தை அரவணைத்துக் கொண்டதே தற்போதைய நிலைக்கு மூல காரணம். ஆங்கிலம் கற்றறிந்தவன்தான் அறிவுஜீவி என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு உயிரூட்டப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையில் தமிழார்வலர் முயற்சியின் பலனாகத் தோன்றிய தாய்த்தமிழ்ப் பள்ளிகள் போன்ற அமைப்புகள் சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் பரவலாக்கப்படவில்லை.

இந்நிலையில் மக்களிடம் மனமாற்றம் ஏற்பட அரப் பள்ளிகளின் கல்வித்தரம் உயர்த்தப்பட வேண்டும். இதுவொன்றே தற்போதைய மீட்சி.

தினமணி
14-12-99

என். சாதிக் பாஷா,
திருப்பூர் - 2.

வேலைக்கே முன்னுரிமை :

தமிழ் வழிக்கல்வி தலையங்கம் (30-11-99) படித்தேன்.

சாதாரண நடுத்தரக் குடும்பங்கள், அதற்கும் கீழ் வாழும் குடும்பங்களின் குழந்தைகள் கல்வி கற்பது அறிவு வளர்ச்சி பெறுவதற்காக மட்டும் அல்ல; பிற்காலத்தில் நல்லமுறையில் அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைப்பதற்காகத்தான் படிக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

வேலை கிடைத்தால்தான் வீட்டில் அடுப்பு எரியும் என்கிற நிலை உள்ள சாதாரண மக்கள் எந்த மொழியில் கல்வி கற்றால் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று பார்க்கிறார்கள். தம் இயலாமையிலும் கஷ்டப்பட்டு

அந்த மொழியில் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள். தனது குழந்தை நல்ல நிலைக்கு வரவேண்டும் என்கிற பெற்றோரின் ஆசையை யாரும் குறை சொல்ல முடியாது.

எனவே தமிழகக் குழந்தைகள் தாய்மொழியில் கல்வி பயில முதலில் வேலைவாய்ப்பிற்கு உத்திரவாதம் தரவேண்டும். இரண்டாவது தாய்மொழியைக் கற்றுக் கொள்ளும் அதே நேரத்தில் பிற மொழிகளையும் கற்றுக் கொள்ள அரசு அனைத்துப் பள்ளிகளிலும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும்.

டி.சி. சாலமன், சேலம்.

தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழமுடியும் :-

தமிழ்நாட்டில் 5–ம் வகுப்பு வரை எல்லாக் குழந்தைகளுக்கும் தமிழ் மொழியிலேயே பாடம் கற்பிக்க வேண்டுமென்று அண்மையில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்கு இது அத்தியாவசியம் என்று கருதப்படுகிறது. ஆனால் உண்மையை உணர வேண்டும். தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழமுடியும். தமிழனை, தமிழ்நாட்டை முன்னேற்றம் இல்லாமல் ஏழையாக்கும் எந்த முயற்சியும் தமிழை வளர்க்காது. பிற மொழிகள் எல்லாம் – ஆங்கிலம், பிரெஞ்ச், ஜப்பானிய மொழிகளெல்லாம் – நாடு முன்னேறிய பிறகே வளம் பெற்றன. தமிழ்நாடு தனிநாடாக இருந்தால்கூட, நவீன அறிவைப் புறக்கணித்து நாட்டை வளப்படுத்துவது இயலாத காரியம். இந்திய நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வளரும் தமிழ்நாடு, நவீன அறிவைப் புறக்கணித்ததால் தமிழன் முன்னேறி வாழ முடியாது.

தமிழ் மொழியிலே மட்டும் படிப்பதனால் வேறு எங்கும் வேலைவாய்ப்புக் கிடைக்காது. தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைப்படும்.

முக்கியமாக, இது தமிழ்நாட்டின் ஏழைகளை வெகுவாகப் பாதிக்கும். வசதி உள்ளவர்கள் எப்படியோ சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு ஆங்கிலப் பயிற்சி கொடுத்து வாழ்வில் முன்னேற்றி விடுவார்கள். தமிழ்நாட்டு ஏழை மக்களின் கதி என்ன? எந்தத் துறையிலும் முன்னேற்றம் இல்லாமல் 21–வது நூற்றாண்டில் தமிழக ஏழை மக்கள் இன்னும் ஏழைகளாகி விடுவார்கள். அழுத்தமாகச் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் எல்லாவித முன்னேற்றம் ஏற்பட்டால் – பணம் பெருகி, வர்த்தகம் பெருகி, விஞ்ஞானம் பெருகினால் – தமிழ் தானே வளரும். இதைக் கவனித்துச் செவிசாய்க்க வேண்டும்.

தினமணி — டாக்டர் சூ. இராமமூர்த்தி

16–10–99 — நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர், சென்னை–4.

பேதங்களை வெல்லும் தாய்மொழி

டாக்டர் சேமுமு. முகமதலி எழுதிய இதயங்களை இணைப்போம் கட்டுரை (2-12-99) கண்டேன்.

அயல்நாட்டில் வாழும்போது பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் கூட்டத்தில் எங்காவது நம் இனிமைத் தமிழ்க்குரல் கேட்டுவிட்டால் ஓடோடிச் சென்று அவரைக் கைகுலுக்கி கட்டித் தழுவிக் கொள்கிற இயற்கையான உந்துதலை நம்மில் பலர் அனுபவித்துள்ளோம்.

தாய்மொழியால் கட்டுண்டோம் என்பதற்கு மறைக்க முடியாத சான்று இது. மனித மனங்களை இணைக்கும் இலக்கியங்கள் வாயிலாகப் பேதங்களையும் வென்றுவிடலாம்.

தினமணி
16-10-99

என்.எம். அப்துல் காதர்,
கூத்தாநல்லூர்.

எதிர்ப்பை நீக்க வழி :

டாக்டர் பி. ராமமூர்த்தி கடிதம் (16.12.99) படித்தேன். எதிர்ப்பு நிலையை மாற்றுவதற்குச் சில செயற்பாடுகள் உதவக்கூடும். தாய்மொழி வழிக் கல்வி பற்றிய யுனெஸ்கோவின் பரிந்துரையைக் கல்வியாளர்கள் எடுத்துரைக்கலாம்.

கர்நாடகத்தில் கொள்கைவழிப் பிரிந்திருந்தாலும் மொழியின் நலனுக்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றன. அதேநிலை இங்கும் அமைந்தால் தமிழ்மொழி நலம் அடையும்.

தினமணி
29-12-99

மலையமான்
சென்னை - 108.

சாமான்ய மக்களுக்கான கல்வி :

மக்களின் பண்பாட்டை, கலை, இலக்கியத்தை, அந்த மக்கள் வாழும் நாட்டை, சிதைக்க வேண்டுமானால் முதலில் அந்த மக்களின் மொழியைச் சிதைக்க வேண்டும். பின்பு ஏனைய அனைத்தும் தானாக சிதைந்து போய்விடும் என்பது வரலாற்று அறிஞர்களின் கூற்று.

இன்று தாய்தமிழ் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் கொண்டுள்ள ஆங்கில அறிவு, பேசும் அழகு, ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளிடம் நிச்சயமாக இல்லை. இதற்கு ஆதாரங்கள் எப்பொழுது

வேண்டுமானாலும் காட்டத் தயார். தமிழ்வழிக் கல்வி என்பது சாமான்ய மக்களுக்கானது. உழைக்கும் வர்க்கத்திற்கானது.

தினமணி
29-12-99

ம. இளங்கோ,
புதுவை.

சிந்திக்க வேண்டிய நிலை :

இந்நாள் வரை தாய்மொழியையே பயிற்று மொழியாகக் கொண்டு செயல்பட்டு வந்த நிறுவனங்களைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்நிறுவனங்களில் பயின்ற பலரின் பாட அறிவு தெளிவற்று இருப்பது வெளிப்படையான உண்மை. இது தாய்மொழிக் கல்வியின் குறையல்ல. அதைப் பயிற்றுவிக்கும் நம்மவர்களின் குறையே.

எந்த மொழியாயினும் தாய்மொழியை இலக்கணப் பிழையின்றிக் கற்றால்தான் பிற மொழிகளைச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கற்க இயலும்; சுய சிந்தனையும் வளரும். இப்போது தமிழ், வரலாறு போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பதோடு அறிவியல், புவியியல் போன்ற பாடங்களும் சரிவரக் கற்பிக்கப்படுவதில்லை.

தினமணி
29-12-99

நீதி - நந்தன்,
கெங்கவல்லி.

பாதிப்பு யாருக்கு?

சிறுபான்மை சமூகத்தாரால் நடத்தப்படும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளுக்கு இச்சட்டம் பொருந்தாது.

இத்தகைய பள்ளிகளில் தான் சமுதாயத்தின் மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்களின் (விவிஐபி) பிள்ளைகள் படிக்கின்றனர். கேந்த்ரீய வித்யாலயா, சிபிஎஸ்சி போன்ற மத்திய பள்ளிகளுக்கும் இச்சட்டம் பொருந்தாது. எனவே பணக்காரர்கள், உயர் அதிகாரிகளின் பிள்ளைகள் தொடர்ந்து ஆங்கிலவழியில் கல்வி பெற வாய்ப்புள்ளது.

மூன்றாவதாக தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தாது. அவர்களும் தொடர்ந்து ஆங்கிலவழிக் கல்வி பயில வாய்ப்புள்ளது. ஏழை, நடுத்தரவர்க்க மக்களுக்குத்தான் இனி அந்த வாய்ப்புக் கிடைக்காது என்பதில் என்ன தவறு?

தினமணி
29-12-99

சி. செயசிங்,
அறந்தாங்கி.

குழந்தைகளைக் காக்கும் முயற்சி :

குழந்தைகள் தங்கள் தாய்மொழியில்தான் சிறப்பாகச் சிந்திக்க முடியும். செயல்பட முடியும். எனவே பயிற்றுமொழி என்பது தமிழைக் காப்பாற்றுவதற்காக என்று நினைக்காமல் தமிழ்க் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான முயற்சி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசுக்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் ஆதரவு அளிக்க வேண்டும்.

தினமணி	மு. கசுத்தூரிபாய்,
29–12–99	மதுரை – 14.

தரத்தை மேம்படுத்த வேண்டும் :

தமிழ்வழிக் கல்வி என்பது நவீன அறிவியலைப் புறக்கணிப்பதாகக் கருதுவதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் நவீன அறிவியலை உள்வாங்கிக் கொள்ளும் திறனைப் பெற வேண்டும் என்பதற்காகவே தமிழ்வழிக் கல்வி வலியுறுத்தப்படுகிறது.

பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலவழிக் கல்வியில் ஆரம்பம் முதலே சேர்ப்பதற்குக் காரணம் அங்கு நிலவும் கல்விச்சூழல், கற்பிக்கும் முறை, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவையேயாகும்.

இன்றையத் தமிழ்வழிக் கல்வியின் தரக்குறைவை அகற்றி அதை மேம்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

தினமணி	தி. அன்பழகன்
29–12–99	திருச்சிராப்பள்ளி – 26.

இனத்தின் கருவூலம் :

கல்வியில் தமிழ் இல்லாவிட்டால் அறிவியலில், அரசியலில், நீதிமன்றத்தில், ஆலயத்தில் எப்படி இருக்கும்? அப்படி நாட்டு மொழிகளாக இல்லாமல் வீட்டு மொழியாகக் கொஞ்சநாள் இருந்து, பிறகு அதுவும் அற்றுப்போய், பழம்பொருள்களை வைக்கும் காட்சிச் சாலையில் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும்.

மொழியை ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவியாக மட்டுமே பார்க்கிற குறுகலான பார்வைதான் இத்தகைய தவறான முடிவுக்கு இட்டுச் செல்கிறது. மொழி ஓர் இனத்தின் மரபு – பண்பாடு – சிந்தனை – வரலாறு – மதிப்பீடுகள் எல்லாவற்றையும் காத்து நிற்கும் கருவூலம் என்பதை உணர்தல் வேண்டும்.

தினமணி	முத்து சந்தானம்,
29–12–99	கருமாத்தூர்.

கட்டுரை

மொழிக்கல்விச் சிக்கலுக்குத் தீர்வு – ச. முத்துக்குமரன்

எடுத்துக்காட்டாக ஒருவன் நல்ல பொறியாளராக உருவாவதற்கு அவன் 10 ஆண்டுகள் பொதுக்கல்வி, இரண்டு ஆண்டுகள் சிறப்பாக கணிதமும் அறிவியலும், பிறகு நான்கு ஆண்டுகள் பொறியியலைப் பயில வேண்டும். மூன்றாவது வகுப்பில் இருந்து அவன் ஆங்கில மொழி கற்ற காலம், பாடத்திட்டப்படி சற்றேறக்குறைய இரண்டு ஆண்டுகள். பெரும்பாலான மாணவர் தமது நேரத்தில் பெரும் பகுதியை ஆங்கிலம் பயில எடுத்துக் கொள்வதால், இந்தக் கால அளவை மூன்று ஆண்டுகள் என்று எடுத்துக் கொள்வோம்; அவன் தமிழ்மொழி படித்த காலம் மூன்று ஆண்டுகள்; பொது அறிவு பெற்ற காலம் 4 ஆண்டுகள்; பொறியியலும் அது சார்ந்த அறிவியலும் கற்ற ஆண்டுகள் ஏழு. ஆக மொத்தம் அவன் கல்வி கற்ற காலம் பதினாறு ஆண்டுகள். அம்மாணவன் ஆங்கிலம் கற்காது தமிழ்வழி முழுமையாகக் கற்று இருந்தால் அவனது பொறியியல் கல்வி மூன்று ஆண்டுகள் முன்னதாக முடிந்திருக்கும். அல்லது இதே காலகட்டத்தில் இப்போது கற்றதைப் போல சற்றேறக்குறைய ஒன்றரை மடங்கு பொறியியல் கல்வி கற்று இருப்பான். நாம் நம் மக்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க வேண்டுமா? அறிவை ஊட்ட வேண்டுமா? ஆங்கிலம்தான் வேண்டும் என்றால் இன்றைய நிலை தொடரலாம். ஆனால் நமக்குத் தேவை துறை அறிவே. ஒருவருக்குத் துறை அறிவு இருந்தால் அவரைத் தேடி மற்றவர்கள் வருவார்கள். அவருடைய மொழியை அறிந்து அவரிடம் உள்ள துறை அறிவைப் பெற மற்றவர்கள் விழைவார்கள்.

ஒருவன் தனது துறைக்குத் தேவையான மொழி அறிவை ஒரு புது மொழியில் அறிய 250 முதல் 500 மணி நேரமே தேவை என்று மொழி கற்பிக்கும் அறிஞர்கள் கூறுகின்றனர். அதாவது ஒருவன் ஆங்கில வழியில் பொறியியல் கற்றிருந்தால், 250–லிருந்து 500 மணி நேரத்தில் பிரெஞ்சு மொழி போன்ற ஒரு புது மொழியைக் கற்று அம்மொழியில் தனது பொறியியல் அறிவை விளக்க இயலும். பிரெஞ்சு நாட்டில் சென்று பொறியாளராகத் திகழ அவன் மறுபடியும் பிரெஞ்சு மொழியில் பொறியியல் கற்க வேண்டியதில்லை; அவனுக்குத் தேவை எல்லாம் 250 முதல் 500 மணி நேர பிரெஞ்சு மொழிப் பயிற்சிதான்.

இன்றையச் சூழலில் ஆங்கிலம் கற்பதால் வேலைவாய்ப்பு பெருகும் என்பதில் ஐயமில்லை. அதேபோன்று பிரெஞ்சு, ஜெர்மன், ருசியன், ஜப்பான், சீனமொழிகள் கற்றாலும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெறலாம். ஆனால் மொழி அறிவு மட்டுமே எல்லாம் அல்ல. துறை அறிவு இல்லாமல் முன்னேற முடியாது. ஆகவே துறை அறிவைப் பெறுவதே முதன்மையானது. துறையில் அறிவு பெற்ற ஒருவர் தனது வேலைவாய்ப்பைப் பெருக்கிக் கொள்ளத் தேவையான புதிய மொழிகளைக் கற்பதே அறிவுடைமை.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் சற்றேறக்குறைய 15 லட்சம் குழந்தைகள் பள்ளியில் முதல் வகுப்பில் சேருகின்றனர். அவர்களில் 10 விழுக்காடு குழந்தைகளே கல்லூரிக்குச் செல்கின்றனர். அவர்களிலும் பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி நிலைக்குச் செல்பவர்கள் ஒரு விழுக்காடு கூட இல்லை. அவர்கள் தமது ஆராய்ச்சிக்காக ஆங்கிலம் போன்ற ஒரு மேலைநாட்டு மொழியைக் கற்பது அவசியம். அதாவது ஆராய்ச்சிகளில் ஈடுபடுவோருக்கு ஆங்கிலம் ஒரு நூலக மொழியாகப் பயன்படும். இவர்கள் தவிர தங்கள் பணிக்குத் தக்கவாறு இரண்டாம் மொழி கற்க வேண்டியவர்கள் இன்னும் ஒரு விழுக்காடு இருக்கக் கூடும். இவர்கள் மட்டுமே இரண்டு அல்லது மூன்று மொழிகளைக் கற்பது தேவை. பொதுவாக இத்தகையோர் தாம் கல்லூரியில் கல்வி கற்கும்போதே இன்னொரு மொழியைப் பகுதி நேரத்தில் கற்றுக் கொள்ள முடியும். ஆகவே எல்லாக் குழந்தைகளும் பள்ளியில் ஆங்கில வழியில் கற்பது தேவையே இல்லை.

நமது நாடு ஒரு மக்களாட்சி நிலவும் நாடு. மேலும் நமது அரசாட்சி மக்கள் நலன் பேணும் ஆட்சி. அத்தகைய ஆட்சி மக்களை நல்வழிப்படுத்த வேண்டும். ஆகவே, தாய்மொழிவழிக் கல்வியே சிறந்தது; தாய்மொழியில் நல்ல பயிற்சி பெறுமுன் அயல்மொழியைத் திணிப்பது குழந்தைகளின் மனநலத்தையும் வளர்ச்சியையும் பாதிக்கும்; எனவே இளவயதில் தாய்மொழிக் கல்வி, தாய்மொழி வழிக்கல்வியைக் கட்டாயமாக்குவது மக்களாட்சியில் அரசின் கடமை ஆகிறது.

ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழியே பயிற்சி மொழி என்ற ஆணையைச் செயல்படுத்தினால் 65 ஆயிரம் ஆங்கிலவழிப் பள்ளி ஆசிரியர்கள் வேலை இழப்பார்கள் என்று சொல்கிறார்கள். சிலர் வேலை இழப்பார்கள் என்பதற்காக தவறான போக்குத் தொடர வேண்டும் என்று

கேட்பது தவறு மட்டும் அல்ல; தார்மீக நெறியும் ஆகாது. மேலும், "தமிழ்நாட்டில் வாழும் ஆசிரியர்கள், ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்க்கு ஆங்கிலத்தில் மட்டுமே சொல்லித்தரும் பயிற்சி உண்டு; தமிழில் சொல்லித்தர இயலாது" என்று சொல்வது நகைப்புக்குரியது.

தங்கள் பள்ளிகள் தரமானவை அல்ல என்றும் ஆங்கிலவழியில் கற்பிக்கிறோம் என்ற ஒரே காரணத்தைக் காட்டி மக்களை எங்கள் பள்ளிகளுக்கு ஈர்த்தோம் என்றும் இப்பள்ளிகளை நடத்துபவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா? ஆங்கிலவழிப் பள்ளிகள் மூடப்பட்டாலும் இவ்வாசிரியர்கள் திறமையானவர்கள் எனில் இங்கு பயிலும் குழந்தைகள் வேறு பள்ளிகளில் சேர்ந்து படிக்க வேண்டும் என்பதால் இவ்வாசிரியர்களுக்கு வேறு பள்ளிகளில் வேலைவாய்ப்புகள் காத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் வாழ்ந்தால் தமிழன் வாழ்வான். தமிழன் தமிழனாக வாழ்ந்தால் தான் தமிழ் வாழும். அதாவது தமிழும் தமிழனும் இணைந்துதான் வாழ முடியும். மொழிதான் பண்பாட்டை வாழ வைக்கிறது; மனிதனை மனிதனாக வாழ வைக்கிறது. எந்த மொழி பேசுபவரும் தம்மொழி இலக்கியங்களைக் கற்று தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ்ந்தால் தான் அவரும் அவர் மொழியும் வாழ முடியும்.

(கட்டுரையாளர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற உறுப்பினர் – செயலர்)

தினமணி – 28.12.99

தொகுப்புரை

1. அரசு ஆணையை மெட்ரிக் பள்ளிகள் எதிர்க்கின்றன என்பதற்காக நாம் கண்டனம் தெரிவிக்கிறோம். இதுவரை சம்பாதித்தவர்கள் எளிதில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். நீதி மன்றத்திற்குச் செல்வது மக்களாட்சி நடைமுறை. நீதி மன்றத்தின் வழியே சிக்கலைத் தீராமல் வைத்துக் கொள்ளவும் முடியும். மெட்ரிக் பள்ளிகள் இதைத்தான் செய்ய விரும்புகிறார்கள். அவர்களின் கோரிக்கையை நீதிமன்றம் மறுத்த பின்னும் இதைத்தான் செய்ய முனைந்திருக்கிறார்கள். இதை நம்மால் தடுக்க இயலாது.

2. மெட்ரிக் பள்ளிகளைக் கண்டிப்பதோடு நாம் நிம்மதியாக இருக்க இயலாது. கடந்த 30 ஆண்டுகளாக ஆங்கிலத்தை ஆதரித்தவர்கள் யார், அனுமதித்தவர் யார், ஆதாயம் பெற்றவர் யார் என்பது பற்றி நாம் அறிவோம். இவர்களையும் நாம் கண்டிக்கத்தான் வேண்டும். இப்பொழுது எதிர்ப்பு கூடிவிட்டது என்பதற்காக அரசு ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். இதற்காக நாம் பாராட்டும் பொழுதே நம் வருத்தங்களையும் வெளியிடுகிறோம். அரசு தன்நிலைப் பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும்.

3. அரசு ஆணை, 5ம் வகுப்பு வரை பயிற்று மொழி தமிழ் என்றுதான் சொல்லுகிறது. இதற்கு 3 ஆண்டுகளை அனுமதிக்கிறது. 6வது வகுப்பு முதல் ஆங்கில வழிக்கல்வி தொடருவதை மறுக்கவில்லை. இப்போது முதல் வகுப்பில் கற்கும் மாணவர்கள், தொடர்ந்து பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றை ஆங்கிலத்திலேயே பெற்றுக் கொள்ளலாம். அரசு வெளியிட்டுள்ள ஆணை ஒரு தொடக்க முயற்சி என்கிறார்கள். இது தொடருமா என்பது குறித்து நம்பிக்கை வைப்பதற்கில்லை. அரசின் நிலைப்பாடு மாறலாம். எதிர்க் கட்சிகள் ஆட்சிக்கு வருமானால் எதுவும் நேரலாம்.

4. தமிழ்ச் சான்றோர் பேரவை கேட்டது இவ்வளவுதானே என்றும் சிலர் விவாதிக்க முடியும். நீதிபதி மோகன் குழுவிலும் இவர்கள் இருந்தார்கள். எதையும் உறுதியாகவோ உருப்படியாகவோ இவர்கள் சொல்லவில்லை. கல்லூரியில் தமிழ்க்கல்வி வேண்டும். மருத்துவம் பொறியில் கல்லூரிகளிலும் தமிழில் வேண்டும். 6 முதல் 12 ஆம் வகுப்பு

வரை தமிழில் வேண்டும். இவற்றிற்கெல்லாம் எப்பொழுது யார் போராடுவது . இன்னுமொரு போராட்டம் எழுச்சி பெறுவது எப்போது. தமிழ்ச்சான்றோர் பேரவைக்கு எதிராகத்தான் இந்தப் போராட்டத்தை நடத்தவேண்டும். தமிழுக்கான எதிர்காலம் இருள் மண்டித்தான் தெரிகிறது.

5. ஆட்சி மொழி தமிழில் இல்லை. நீதிமன்றத்தில் தமிழ் இல்லை. தமிழில் கற்காமலேயே தமிழகத்தில் பட்டங்கள் பெற முடியும். மேல் தட்டில் உள்ளவர்களுக்கு கல்வி வாய்ப்புக்கள் அதிகம். எதிர்காலத்தில் இவர்கள்தான் ஆட்சி பீடங்களில் அமருவார்கள். தமிழகத்தில் தெலுங்கு அல்லது கன்னட மொழியைத் தாய்மொழியாக கொண்டவர்களை தமிழகத்தில் தமிழுக்கு எதிராகத்திரட்டும் சக்திகளும் வளர்ந்து கொண்டு வருகின்றன. புதிதாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கும் அரசு ஆணையானது தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கற்கலாம் என்று அனுமதிக்கிறது. வேற்று மாநிலங்களிலிருந்து வந்து இங்கு அரசுப்பணியில் இருப்பவர் தொகையும் அதிகம். இந்த ஆபத்தான சூழலில், தமிழ் தன் உயிரைத் தக்க வைத்தால்தான் தமிழன் இருக்க முடியும். தமிழ்ப் பண்பாடு இருக்க முடியும். 5ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய் மொழியில் கல்வி என்பது எந்த அளவுக்கு பயன் படும். பணமா பண்பாடா என்ற மோதலில் எது வெற்றி பெறும். தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதை: பெரும் நோய்க்கு சுக்குக் கசாயம் என்ற கதை நமக்குத் தெரியும்.

6. இன்னும் ஆழமாக ஆராயவேண்டும். குழந்தைகளை எப்படி மனிதராக்குவது என்பது குறித்த கல்விக் கொள்கையை நம் முன் நிறுத்த வேண்டும். கல்விக் கொள்கை பற்றிய விரிவான ஆய்வில்தான் வரலாற்றுக் கல்விக்கு என்ன இடம், அறிவியல் கல்விக்கு என்ன இடம், அதைப்போல மொழிக்கு என்ன இடம் என்பதைத் தீர்மானிக்கமுடியும். பணம் பண்ணுவது கல்வியின் நோக்கமாக இருக்க முடியாது. சுதந்திரமான சூழலில்தான் கல்விப் பயிர் தழைக்க முடியும். அதிகாரத்திற்கு மனிதனை விட்டுக் கொடுப்பது கல்வியாக இருக்கமுடியாது. குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் சுதந்திரமான சூழல் என்பது ஆசிரியர்களுக்கும் இன்றியமையாதது. தனியாரிடம் கல்வியை ஒப்படைப்பது என்பது ஆதிக்கங்களுக்கு நம்மை ஒப்படைப்பதாகும். ஆதிக்கங்களை எந்த வடிவத்திலும் நாம் ஒப்புக் கொள்வதற்கில்லை.

7. இது கல்வி பற்றிய சிக்கல் மட்டுமல்ல, வாழ்வியல் பற்றிய சிக்கல், வரலாறு குறித்த சிக்கல்; வாழ்வியலில் பண்பாட்டுக்கு என்ன இடம், பணத்துக்கு என்ன இடம், அரசியலுக்கு என்ன இடம் என்று தொடங்கி பலவற்றை நாம் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். நமக்கான தேசம், நமக்கான அரசியல், நமக்கான பொருளியல் என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். முதலாளியமா சமதர்மமா எதன் சார்பில் நாம் நிற்கிறோம் என்று சிந்திக்க வேண்டும். அமெரிக்காவின் அதிகாரத்தைப் பெருக்குவதற்கு நம் இளைஞர்கள் பலியாகக் கூடாது. குழந்தைகளுக்கும் மனித உரிமையுண்டு. குழந்தைகள் பெற்றோர்களின் கைப்பாவைகளாக இருக்கமுடியாது. தமிழ் என்று சிந்திக்கும்பொழுதே திராவிட இயக்கம் குறித்தும் பிற இயக்கங்கள் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். தமிழ்நாடு தனிநாடு என்று ஆனால்தான் தமிழ் ஆட்சிமொழியாகும், பயிற்சி மொழியாகும் என்பது உண்மையில்லை. இப்படிச் சொல்பவர்களும் தமிழ்த்தேச விடுதலையைக் கைவிட்டவர்கள். இன்று தமிழ் என்று பேசும்போதே தமிழ்த் தேசியம் என்று பேசுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கல்வியின் எல்லா நிலைகளிலும் தமிழ்தான் பயிற்றுமொழி என்ற நிலை வருமானால் ஆங்கிலம் ஒரு மொழியாக கற்று தரப்படுவதைப் பற்றி நமக்கு அச்சமில்லை. இயற்கையின்மீது, உயிர்களின் மீது, மண்ணின்மீது, உழைக்கும் மக்கள் மீது, நேசத்தை வளர்ப்பதில்தான் மனித வாழ்க்கை சிறக்கும், இத்தகைய நேசத்தை நமக்குள் வளர்ப்பது தமிழ்மொழி. வள்ளுவரையும் இளங்கோவையும் சித்தர்களையும் பெற்றிருப்பது நமக்கான அரிய வாய்ப்பு. மனிதர்களுக்கிடையில் பகைமையை இவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். உலக மனிதனாக தன்னை வளர்த்துக் கொள்வதற்கான தகுதியுடையவன் தமிழன்.

தமிழ்நேயம்

அகமும் புறமும்

கவிக்கோ என்று பாராட்டப்படும் அப்துல் ரஹ்மான் அவர்களுக்கு 99ஆம் ஆண்டுக்குரிய சாகித்ய அகாதமி பரிசு கிடைத்திருப்பது குறித்து நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்க்கவிதைக்கான பரிசு என்பதனால் நமக்கு இரட்டை மகிழ்ச்சி. படிமம் என்றும் குறியீடு என்றும் சரியலிசம் என்றும் ஹைகூ என்றும் தமிழ்க் கவிதைக்கு புதிய வளங்களைச் சேர்த்தவர். தமிழ்க் கவிஞர்களுக்கு மட்டுமல்லாமல் மாணவர்களுக்கும் புதிய நோக்கில் கவிதை எழுதக் கற்பித்தவர். கவிதைச் சிந்தனையில் அவர் தொட்டுத் துலங்காத சந்துபொந்துகள் எதுவுமில்லை. தமிழ்க் கவிதை வரலாற்றில் கலந்தவர். திராவிட இயக்கச் சிந்தனையை விடாது கடைப்பிடிப்பவர். கவிதை இயந்திரம் என்று சொல்லுமளவுக்கு இடையறாது கவிதை படைப்பவர். 2 ஆண்டுகளுக்கு முன்பு கவிஞர் சிற்பி அவர்களுக்குக் கிடைக்கத் தவறிய இலக்கியப் பரிசு இப்பொழுது அப்துல் ரஹ்மான் அவர்களுக்குத் தகுதி கருதி வழங்கப்பட்டிருக்கிறது. கவிஞர் அவர்களை "தமிழ்நேயம்" வெகுவாகப் பாராட்டுகிறது.

3000 ஆவது ஆண்டின் முதல் ஆண்டுக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். எத்தனையோ காரணங்களுக்காக இந்தப் புதிய ஆண்டைக் கொண்டாடுகிறார்கள். தமிழ் மக்களுக்கான ஆண்டுத் தொடக்கம் வேறு என்றாலும் மேற்கத்திய நாகரிகத்தின் சில கூறுகள் நம்மோடு இரண்டறக் கலந்துவிட்டதன் காரணமாகவும் இந்த ஆண்டின் தொடக்கத்தைத் தமிழ்மக்கள் கொண்டாடுகிறார்கள். வசதி மிக்கவர்களுக்கு மட்டுமல்லாமல் வசதி குறைந்தவர்களுக்கும் கொண்டாட்டங்கள் தேவைப்படுகின்றன என்பதனாலும் கொண்டாடுகிறார்கள். வள்ளுவர் சிலையைத் திறந்து வைத்துக் கலைஞரும் கொண்டாடுகிறார். பொங்கல் வரை அவர் காத்திருக்கக் கூடாதா என்றும் நண்பர்கள் கேட்கிறார்கள்.

3000-த்தின் முதல் ஆண்டில் வள்ளுவரை நாம் நெஞ்சில் நிறுத்தும் முயற்சியை வரவேற்கிறோம். இன்னும் 1000 ஆண்டுகளுக்கு வள்ளுவர் நெறியை நாம் கடைப்பிடிக்கத்தான் வேண்டும். வள்ளுவரின் ஒப்புரவும் சமதர்மமும் வேறுஅல்ல, நமக்குள் சமதர்ம உணர்வைத் தொடர்ந்து தூண்டுபவர் வள்ளுவர்.

சென்னையில் வள்ளுவர் கோட்டத்தைக் கலைஞர் நிறுவினார். மாவட்டத் தலைநகரங்களில் சிறிய அளவிலேனும் வள்ளுவர் கோட்டங்கள் நமக்குத் தேவைதான். ஆனால் குமரிமுனையில் குறுகிய பாதை ஒன்றின்மீது வள்ளுவரை

நொண்டியடிப்பது போல, இத்தனை உயரத்தில் நிறுத்தியிருப்பது நமக்கு வருத்தமாகத்தானிருக்கிறது. 2 நாள் கொண்டாட்டங்களுக்குப்பிறகு எல்லாரும் வந்துவிட்ட நிலையில் வள்ளுவர் கடுங்குளிரில் தனித்து நிற்கிறார். இந்துத்வ வாதிகள் குமரிக்கடலில் விவேகானந்தருக்கு மண்டபம் எழுப்பினார்கள். அவர்களுக்குப் போட்டியாக வள்ளுவரை அங்கு நிறுத்தத்தான் வேண்டுமா.

சமதர்மம் பேசிய விவேகானந்தரை இந்துத்துவத்தினர் தமக்குள் முடக்க விரும்புகிறார்கள். விவேகானந்தர் இவர்களுக்குள் முடங்க முடியாது. மதம் என்றாலே நஞ்சு என்றும், அபின் என்றும் கருதுகிறவர்கள் விவேகானந்தரைப் புரிந்து கொள்ளவில்லை. விவேகானந்தரைப் போலவே சமதர்மம் என்ற உணர்வுக்கான நமக்கு வள்ளுவரும் வேண்டும்.

திருக்குறளை முற்றோதும் குழந்தைகளுக்கு மாதம் 1000 ரூபாய் என்று கலைஞர் அறிவித்திருப்பது நமக்குத் தேனாகத்தான் இனிக்கிறது. இனி ஆயிரமாயிரம் குழந்தைகள் வள்ளுவரைக் கற்பார்கள் என்பதில் ஐயமில்லை. தமிழ்மக்கள் நெஞ்சில் வள்ளுவர் அறம் தளைக்க இதுவழி ஏற்படுத்தும். இதைப்போலவே ஊராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் திருக்குறள் படிப்பகங்கள் திறக்கப்படும் என்று கலைஞர் அறிவித்திருக்கிறார். எங்கும் ஊழல் பரவியுள்ள நிலையில் இந்தப் படிப்பகங்கள் என்னவாகுமோ என்று நாம் கவலைப்படுகின்றோம். (பணத்திற்கு என்னவழி) – சமத்துவபுரம் சாதியை ஒழிக்காது என்றாலும் நாம் வரவேற்கிறோம். (இங்கும் தொடர்ந்து ஊழல்கள்) – உழவர் சந்தை ஒரு அருமையான ஏற்பாடு; வெற்றி பெறவேண்டும். வள்ளுவரைப் படித்தால் மட்டும் போதுமா, வள்ளுவரை வாழ்விக்கவேண்டுமானால் நாம் என்னவெல்லாம் செய்யவேண்டும். சிலைகள், மண்டபங்கள், விருதுகள், பட்டங்கள் எல்லாமே வேடிக்கைகளாய் மாறிவிடக்கூடாது.

விமானக்கடத்தல் என்ற சிக்கலைச் சமாளித்ததன்மூலம் 150க்கு மேற்பட்ட மக்களை மைய அரசு காப்பாற்றியதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம். கடத்தல்காரர்கள் யார், அவர்களுக்கு பின்னால் இருக்கும் சக்திகள் எவை என்ற விவாதங்களும் குற்றச் சாட்டுக்களும் தொடர்கின்றன. ஓர் உண்மை நமக்கு நன்றாகத் தெரிகிறது. காஷ்மீர் சிக்கல் தீராதவரை கார்கில்களும் கடத்தல்களும் தொடரத்தான் செய்யும். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் (இப்பொழுது சிரியாவுக்கும்) இடையில் இருக்கும் சிக்கலைக் காட்டிலும் காஷ்மீரச் சிக்கல் கடுமையானது என்று நம்மால் நினைக்க முடியவில்லை. காஷ்மீரத்தினுள்ளும் கடுமை பன்மடங்கு அதிகரித்து வருகிறது. காஷ்மீர் சிக்கல் தொடரும்வரை ராணுவப் பெருக்கமும் அணுஆயுத அச்சமும் அதிகரிக்கவே செய்யும். பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் தொடர்ந்து மக்கள் மீது சுரண்டலும் ஒடுக்குமுறையும் அதிகரிக்கும். அரசுகள் தூண்டிவிடும் தேசப்பற்று என்ற

பிரமைகளை நாம் நம்புவதற்கில்லை. அடிப்படைவாதங்கள் எந்த வகையிலும் சிக்கலைத் தீர்க்க உதவமாட்டா. கடத்தல்காரர்களுக்கு விட்டுக் கொடுத்திருக்கக்கூடாதென்றும் பயங்கரவாதிகளில் 3 பேரை விடுதலை செய்திருக்கக் கூடாதென்றும் பேசுபவர்களை நாம் மதிப்பதற்கில்லை. தேசப்பற்று என்னும் முகமூடியை தரித்துக் கொள்ளும் பயங்கரவாதிகள் இவர்கள். நாம் மக்கள் சார்பிலிருந்துதான் பேசமுடியும். 160 பேர்களும் நம் மக்கள் கடத்தல்காரர்கள் நெஞ்சிலும் கருணை இல்லாமல் இல்லை. அரக்கத்தனமான அரசியலின் விளைவுகள் இவைகள். இவர்களை உற்பத்தி செய்பவர்களைத்தான் நாம் காயவேண்டும்.

டிசம்பர் 22ல் வடகோவை கல்வியகத்தில் மெட்ரிக் பள்ளிகளுக்கெதிராக ஒரு கலந்தாய்வுக்கு ஏற்பாடு செய்தோம். மெட்ரிக் பள்ளிகளைக் கண்டிப்பதுகூட நம் நோக்கமாக இல்லை. இந்த நிலை நமக்கு எப்படி ஏற்பட்டது. இந்தச் சிக்கல் எப்படி, எப்பொழுது தீரும் என்ற முறையில்தான் ஆய்வு செய்தோம். கலைஞரையும் தமிழக அரசையும் கடுமையாக சிலர் திறனாய்வுக்கு உட்படுத்தினர். இது தேவையான திறனாய்வு என்பதில் ஐயமில்லை. கோவை வட்டாரத்தில் கு.வெ.கி. ஆசான் அவர்களும், புலவரேறு மருதவாணன் அவர்களும் என்றும் எங்கள் வணக்கத்திற்குரியவர்கள். இவர்களின் கருணை என்ற குடைநிழலில் நாங்கள் பத்திரமாக இருக்கமுடியும். வெளிப்படையாகப் பேசவும் முடியும்.

தமிழை ஆட்சிமொழி ஆக்கவில்லை, கல்விமொழி ஆக்கவில்லை, இதற்கு மாறாக ஆங்கிலத்தை ஆதரித்தார்கள். ஆயிரக்கணக்கில் ஆங்கிலப்பள்ளிகள் தோன்றுவதற்கும் காரணமாக இருந்தார்கள். கோடிக்கணக்கில் மக்கள் கொள்ளையடிக்கப்படுவதற்கும் ஆதரவாக இருந்தார்கள். கொள்ளையில் பங்கும் பெற்றார்கள். இவ்வாறெல்லாம் இன்று கலைஞரையும் கழக அரசையும் நாம் கடுமையாகக் குறை சொல்ல வேண்டியிருக்கிறது. ’65ல் இந்திக்கெதிராக ஆங்கிலத்தை நிறுத்தியதில் அன்று எங்களுக்கும் உடன்பாடு உண்டு; ஆனால் தொடர்ந்து தமிழை ஆங்கிலம் அழித்து வருவதை தமிழ்ப் பற்றாளர்கள் எப்படி ஏற்கமுடியும். தமிழை வைத்து ஆட்சியைக் கைப்பற்றியவர்களுக்குள் தமிழ்ப்பற்றும் சமூகப்பற்றும் என்னாயின. இலட்சக்கணக்கான கழக ஊழியர்கள் இது குறித்து கவலைப்படாமலா இருந்திருப்பார்கள். 5–ஆம் வகுப்பு வரை தமிழ்தான் என்று அரசு ஆணை பிறப்பித்தவுடன் கலைஞருக்கு / அரசுக்கு நன்றி நன்றி என்று இவர்கள் எப்படி வெட்கமில்லாமல் தெருவுக்கு வருகிறார்கள். இடைக்காலத்தில் திராவிட இயக்கம், தமிழ் இயக்கம் பின்னடைந்துவிட்டது, எங்களால் எப்படி நிம்மதியாகச் சாகமுடியும் என்று எங்கள் மரியாதைக்குரிய மு. இராமநாதன் முதலியவர்கள் எத்தனை முறை இங்கு பேசியிருப்பார்கள். இப்பொழுதும் தமிழுக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம் என்று இவர்கள் சொல்வதை நாங்கள் எப்படி முற்றாக நம்பமுடியும். இவர்களோடு சேர்ந்துதான் நாங்கள் தமிழ் கற்றோம்.

இவர்கள்தான் எங்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டினார்கள். கலைஞர் முதலியவர்களை நாங்கள் கண்டிக்கும்போதே எங்களுக்குள் ஏற்படும் வருத்தத்திற்கு அளவேயில்லை. ஆங்கிலம் நமக்கு, இன்றும் என்றும் நெருக்கடியாகத்தான் இருக்கப் போகிறது. இது மொழிச்சிக்கல் மட்டுமல்ல சமூக விடுதலையோடு இது நெருக்கமான உறவுடையது. தமிழ்நாடு விடுதலை பெற்றாலொழிய தமிழ் ஏற்றம் பெறாது என்று சொல்வதிலும் உண்மையில்லை. இப்படிச் சொல்வதன் மூலமும் இவர்கள்தம் ஆதிக்கத்தை தக்க வைப்பதைத்தான் நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். திராவிட இயக்கங்கள் தமிழ் மக்களின் விடுதலைக்கான வாய்ப்புகளைப் பெருமளவில் தவறவிட்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு தமிழ் மக்களை ஏமாற்றுவார்கள்.

திருமதி இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் பெண் எழுத்தாளர் சிறுகதைப் போட்டி முடிவுகள்

இலண்டனில் வாழும் தமிழ் எழுத்தாளராகிய திருமதி இராஜேஸ்வரி அவர்களின் விருப்பத்திற்கிணங்க 1999ஆம் ஆண்டிலும் பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியை "தமிழ்நேயம்" வாயிலாக அறிவித்தோம். போட்டியில் 50க்கும் மேற்பட்ட பெண் எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். 55 சிறுகதைகள் வந்தன. இலங்கையிலிருந்தும் இருவர் கலந்து கொண்டனர். மூவர் கொண்ட நடுவர் குழு சிறுகதைகளை மதிப்பிட்டு பரிசுக்குரிய ஐந்து கதைகளைத் தெரிவு செய்தனர். திருமதி இராஜேஸ்வரி அவர்கள் அறிவிப்பின்படி ஒவ்வொரு கதைக்கும் ரூ. 1000/– என்ற முறையில் ஐவருக்கு ரூ. 5000/– வழங்கப்படுகிறது. 2000 சனவரி இறுதியில் அல்லது பிப்ரவரி தொடக்கத்தில் தொகை அனுப்பி வைக்கப்படும். பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு "தமிழ்நேயம்" சார்பில் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நடுவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

பரிசுக்குரிய கதைகளும் எழுத்தாளர்களும்

1. உடலே சவப்பெட்டியாக – ஸ்ரீ பிரியா, செகந்திராபாத்
2. காத்தாயி – குணவதி, கோவை
3. சிறை புதிது – அனுஷா, குன்னூர்
4. உயிர்த்தெழல் – எம்.ஏ. சுசீலா, மதுரை
5. நாள் முழுதும் கவிதையாய் – ரஜினி பெத்துராஜா, ராஜபாளையம்

நடுவர்கள்

முனைவர் ஹரி விஜயலட்சுமி
தமிழ்த்துறை, விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலை

முனைவர் தைலாம்பாள்
ஆங்கில இலக்கியத்துறை, விசாலாட்சி மகளிர் கல்லூரி, உடுமலை

சுப்பிரபாரதி மணியன்
ஆசிரியர் "கனவு" திருப்பூர்.

சிறந்த சிறு கதைகள்

பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முறையில் ஆண்டுதோறும் ஆண்டின் இறுதியில் இந்தச் சிறுகதைப் போட்டியை நடத்துவது திருமதி இராஜேஸ்வரி அவர்களின் விருப்பம். பெண்கள், காலங்காலமாகத் தொடர்ந்து வரும் சமூக நெருக்கடிகளுக்கிடையில் தாங்கள் அனுபவிக்கும் துயரங்கள் மற்றும் சிக்கல்களைத் தாமே புரிந்து கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் சிறுகதைப் போட்டியின் நோக்கம். தம்மைப் புரிந்து கொண்ட நிலையில்தான் தன் விடுதலைக்கான வழிமுறைகள் குறித்துப் பெண்கள் சிந்திக்கமுடியும். இம்முறையில் விடுதலையை நோக்கி மகளிரைத் தூண்டுவதும் திருமதி இராஜேஸ்வரி அவர்களின் நோக்கம். தொடர்ந்து இப்போட்டிகள் ஆண்டுதோறும் நடைபெறும் என்பதை அவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

சென்ற ஆண்டு இரண்டு சிறுகதைகள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு ஒரு கதைக்கு ரூபாய் இரண்டாயிரத்திஜநூறு என்ற முறையில் இருவருக்கு ரூ. 5000/- வழங்கினார் திருமதி இராஜேஸ்வரி அவர்கள். இந்த ஆண்டில் ஒருவருக்கு ரூ. 1000/- என்ற முறையில் 5 சிறுகதைகளுக்கு ரூ. 5000/– வழங்குகிறார்.

பரிசு பெறவில்லையென்றாலும் போட்டிக்கு வந்த பெரும்பாலான சிறுகதைகள் பெண்களின் துயரங்களை அழுத்தமாகச் சொல்லுகின்றன. நவீன இலக்கியம் என்ற முறையில் சிறுகதைக்கான உத்திகளும் நடையழகும் தேவை என்பது உண்மைதான். நகரத்தில் வாழ்பவர்கள் படிப்பறிவும் கலை உணர்வும் வாய்ந்தவர்கள். உத்திகள் மற்றும் நடையழகு என்பனவற்றைக் கொண்ட கதைகளைத்தான் ஏற்கின்றனர். முதல் முறையாகத் தம் துயரங்களை வெளியே கொட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்த நிலையில், உத்திகள் தெரியாத நிலையிலும் பெண்கள் கனல்தெரிக்க, கண்ணீர் துளிர்க்க தம் அனுபவங்களைச் சொல்லுகிறார்கள். போட்டிக்கு வந்த சிறுகதைகளைத் தொடர்ந்து படிக்கும்போது இவர்களின் துயரம் கடலளவு பெரிது என்ற உணர்வு ஏற்படுகிறது. கரை காணமுடியாத பள்ளத்தில், ஆழத்தில் கிடந்து இவர்கள் தவிக்கிறார்கள். இவர்களை இந்நிலைக்கு ஆளாக்கியவர்கள் கொடியவர்கள் மட்டுமல்ல; கொலைகாரர்கள். இந்தக் கொடியவர்களை ஆண்கள் என மட்டுமே இனம் காணுவதுபோதாது. இவர்களையும் உள்ளடக்கியதாக காலங்காலமாய் நிலவிவரும் சமூகத்தையும் வரலாற்றையும் ஆதிக்கங்களையும் நாம் கண்டாக வேண்டும். இன்னும் எத்தனை காலத்துக்கு இந்தக் கொடுமைகள் என்று நம் நெஞ்சம் நோகிறது.

போட்டிக்கு வந்த இந்தச் சிறந்த சிறுகதைகள் சிதறிவிடக் கூடாது. பெண் படைப்பாளிகளை நாம் தாங்கியாக வேண்டும் என்ற முறையில் '98 போட்டியில் கலந்து கொண்டவர்களின் 12 சிறுகதைகளைத் தொகுத்து "காயங்கள்" என்ற பெயரில் வெளியிட்டோம். அதேபோல இந்த ஆண்டிலும் இன்னொரு தொகுப்பை வெளியிடக் கருதுகிறோம். நிதி மிகுந்தவர் மற்றும் சமூக உணர்வுமிக்கவர்களின் ஆதரவினை

வேண்டுகிறேன். '99 சிறுகதைக் போட்டிக்கு வந்த சிறுகதைகளிலிருந்து சிறந்த கதைகள் என நாம் தெரிவு செய்தவற்றைக் கீழே தருகிறோம். "தமிழ்நேயம்" சார்பில் இவர்களுக்கு எங்கள் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

1. கள்ளத்தனமாய் உள்ளே புகுந்தவள் – ஸ்ரீ பிரியா, செகந்திராபாத்
2. இரண்டு இரவுகள் – அனு வெண்ணிலா, சென்னை.
3. ஆர்வமே நெய்யாக – பிரேமாநந்தகுமார், ஸ்ரீரங்கம்.
4. மலரினும் மெல்லிது காமம் – தமிழ்ச்செல்வி, மதுரை.
5. டீச்சர் – சிந்தா, கடலூர்.
6. கூட்டைக் கட்டிவிட்டால் – ந. அனுராதா, மதுரை.
7. சுயம் வரம் – ரமணி பிரசாத், சூலூர்.
8. மனம் – ஆர். பேபி, நாமக்கல்
9. கம்பியில்லாச் சிறை – மகிமைப் பிரகாசி, சிவகங்கை
10. மூலை – வத்சலா, சென்னை
11. இந்தப் பூக்கள் அர்ச்சனைக்கு அல்ல – கிருத்திகா, திருவாரூர்
12. துணையா – சாதனா ராதாகிருஷ்ணன், கோவை
13. கிரீடம் சூடிய ஓர் உறுப்பு – பொற்கலை, புதுச்சேரி

இன்னும் சில நல்லகதைகள்

1. ஓசையின்றி ஒரு – சூர்யமீரா, திண்டிவனம்
2. ஒழுங்கு – லலிதா, வண்டலூர்.
3. உரிமை என்பது – கோ. இராசமணி, திருச்சி.
4. விடியலைத்தேடி – இராதா, பள்ளத்தூர்
5. என்றும் என் பந்தம் – வி. இராஜாமணி, சின்னக்காஞ்சிபுரம்
6. தேடல் – ஜூலியட்ராஜ், நெய்வேலி
7. சட்டை போட்ட குட்டி தேவதை – அனுராதா, சென்னை
8. அவள் ஒரு கவிதை – இரா.கயல்விழி, திருவாரூர்.
9. முயற்சி திருவினையாக்கும் – லட்சுமி தேவி, புத்தூர்
10. தீப்பொறி – இரா. விசாலாட்சி, புதுவை.

புதிய நூல்கள்

அறிவியல், அதிகாரம், ஆன்மீகம்
("நிகழ்" கட்டுரைகள்)
காவ்யா, பக்கம் 192
விலை ரூ. 60/-

சாதி மதங்களைப் பாரோம்
தொகுப்பு :
பொன்னீலன், முப்பால்மணி
பேராசிரியர் நா. வானமாமலை
வெளியீட்டகம்,
மணிகட்டிப் பொட்டல் - 629501
விலை ரூ. 40/-

இறையியல் இறைவாக்கினர்
பணி. லூர்துசாமி நினைவாக
தொகுப்பு : பணி, ச.தே. செல்வராசு
வைகறை வெளியீடு, திண்டுக்கல்
விலை ரூ. 40/-

தமிழில் படைப்பிலக்கியம்
ஞானி,
காவ்யா,
பக்கம் 256, விலை ரூ. 75/-

தத்துவ தரிசனம்,
தொகுப்பு : ஈ.எஸ்.டி. செ. ஞானன்
மணிவாசகர் பதிப்பகம்
பக்கம் : 496 விலை ரூ. 100/-

வ.உ.சி.யின் சிவஞான போதஉரை
பதிப்பாசிரியர்:ஆ.இரா. வேங்கடாசலபதி
வ.உ.சி. சமூக அறிவியல் நிறுவனம்,
தூத்துக்குடி.
விலை ரூ. 30/-

புதிய தலைமுறை (ஆய்வு நூல்)
ஆசிரியர் : தமிழரசி
விலை ரூ. 25/-

விடுதலை இறையியல்
("நிகழ்"கட்டுரைகள்)
விலை ரூ. 25/-

நானும் என் தமிழும்
ஆசிரியர் ஞானி,
விலை ரூ. 25/-

தமிழன் - வாழ்வும் வரலாறும்
தமிழ்த்தேசிய அரசியலுக்கு
ஒரு முன்னுரை - ஞானி
விலை ரூ. 25/-

தொடரும் ஆங்கில ஆதிக்கமும்
தமிழின் அடிமை நிலையும்
ஆசிரியர் : மருத்துவர் கோபி
விலை ரூ. 3/-
(இவை "நிகழ்" முகவரியில்
கிடைக்கும்.)

கடல் முகம் (கவிதைகள்)
ஆசிரியர் : கவிஞர் பாலைநிலவன்
தரு வெளியீடு, ராம்நகர், கோவை
விலை ரூ. 40/-

குடைமறந்த நாளின் மழை
(கவிதைகள்)
ஆசிரியர் : கவிஞர் சேதுபதி
ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,
7 போயஸ் ரோடு,
சென்னை - 600 018
விலை ரூ. 30/-

தூக்கு மரத்தை தூக்கிலிடுவோம்

நந்தனை தீயிலிட்டு
கடவுளாக்கியவர்கள்
நான்கு தமிழரை தூக்கிலிட
புலிகளாக்குகிறார்கள்.

அவர்கள் நான்கு தமிழரை
தூக்கிலிடவில்லை
தமிழ்தேச விடுதலைக்கு
விதைபோடுகிறார்கள்.

தூக்கு மரம் இப்போது
உங்கள் வசம்
அதில் தொங்குவது
இன்று தமிழனாக இருக்கலாம்.

ஆனால் நாளை
அம்மரம் எம்வசமாகும்
அதில் தொங்குபவன் நிச்சயம்
எங்கள் எதிரியாகத்தானிருப்பான்.

உங்கள் தோள்கள்
பூணூல் சுமக்கும்வரை
உங்கள் நெஞ்சில்
நீதி இருக்காது.

- கி. ஆறுமுகம், விருதுநகர்

(டி.ஆர்.டி. வானொலியில் 16.11.99 அன்று ஒலிபரப்பான கவிதை)

ஆசிரியரும் வெளியிடுபவரும்
கி.பழனிச்சாமி (ஞானி)
123, காளீசுவரர் நகர், கோயமுத்தூர் 641 009 தொலைபேசி : 235040
அச்சாக்கம் : ஜி.எம்.சிஸ்டம்ஸ், 10வது வீதி, காந்திபுரம், கோயமுத்தூர்.